பக்கங்கள் 08 விலை ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | ஆனி 19 | 03 - 07 - 1992 | வெள்ளிக்கிழமை | ஓசை 136

## குரங்கு ஈரல் மனிதனுக்கு சத்திர சிகிச்சை வெற்றி

பஞ்சன் காமாலை பீரக நோயினால் ஈரல் பாதிக்கப்பட்ட மனிதர் ஒருவருக்கு குரங்கின் ஈரலைப் பொருத்தும் சத்திர சிகிச்சை வெற்றிபெற்றுள்ளது என தெரிவிக்கப்படுகிறது. 35 வயதுடைய இந்த நபர் மேற்படி சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படா விட்டால் ஒருமாதம்கூட உயிர் வாழ்ந்திருக்க மாட்டார். அதோடு மனிதனுடைய ஈரல் பொருத்தப்பட்டாலும் அவர் மீண்டும் அந்த [8 ஆம் பக்கம் பார்க்க]

## (புல்லாவெளியில் ஏற்பட்ட பேரிழப்பு)

# புதிய தந்திரோபாயம் குறித்து

# ராணுவ உயர்மட்டம் ஆலோசனை

[கொழும்பு]

ஒப்பரேசன் பலவேகய II எதிர்பார்த்த வெற்றியைக் கொடுக்காத அதேவேளை, இராணுவத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பினால், இத் தாக்குதல் தந்திரோபாயம் குழப்பமடைந்துள்ளது. இந் நிலையில், இப் பகுதியில் மேற் கொள்ள வேண்டிய புதிய தந்திரோபாயம் பற்றி ஆயுதப்படைகளின் தளபதிகள், தீவிர ஆலோசனை நடத்தி வருவதாக கொழும்பிலிருந்து கிடைக்கும்செய்திகள் தெரிவிக்கின்றன.

வெற்றிலைக் கேணிக்கும் - ஆனையிறவிற்கும் இடையில் 24 மணிநேரத்திற்குள் தொடர்பை ஏற்படுத்தி விடலாம் என ஒப்பரேசன் பலவேகய II இன் போது திட்டமிடப்பட்டிருந்தது. அதாவது புலிகள் எதிர்ப்பை இலகுவாக முறியடித்து புதிய டாங்கிகளுடன் விரைவாக முன்னேறலாம் எனத் திட்டமிடப்பட்டது. ஆனால், எதிர்பார்த்ததைவிட புலிகளின் எதிர்ப்பு பலமானதாக இருந்ததோடு, இராணுவத் தரப்பில் இழப்பும் பெரிய அளவில் ஏற்பட்டது.

இதைத்தொடர்ந்து நான்கு நாள் நடவடிக்கையின்பின்னர் ஒப்பரேசன் பலவேகயII இடைநடுவில் நிறுத்தப்பட்டு, இப் பகுதியில் புதிய இராணுவ நடவடிக்கை குறித்து மந்திராலோசனை நடைபெற்று வரு (8 ஆம் பக்கம் பார்க்க)

## தொடர்ந்து விமான குண்டுவீச்சு அகோர எறிகணைத் தாக்கு

(யாழ்ப்பாணம்)

வெற்றிலைக்கேணி கட்டைக்காட்டுப்பகுதிகளிலும் அதனை அண்டியுள்ள குடியிருப்புப் பகுதிகளிலும் சிறிலங்கா விமானப்படை குண்டு வீச்சு விமானங்களும், உலங்குவானூர்திகளும் அகோரத் தாக்குதல்களைத் தொடர்ந்தும் நடத்தின.

நேற்று மோதல்கள் இடம் பெறாத வேளையிலும் வான் தாக்குதல்கள் நடத்தப்பட்டன

அத்துடன் வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, ஆனையிறவு இராணுவ முகாம்களிலிருந்து பலத்த எறிகணை வீச்சும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனால் அப்பகுதியிலுள்ள பல கட்டடங்கள் பெரும் சேதத்திற்கு உள்ளாகி இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஞாயிறு தொடக்கம் இடைவிடாது வான் தாக்குதல்களும், எறிகணை வீச்சும் மேற்கொள்ளப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

## வீரச்சாவு

### 2ஆம்லெப். காளிதாஸ் வீரவேங்கை வசந்தன்

30-06-92 அன்று புல்லாவெளியில் இடம்பெற்ற மோதலில் 2ஆம் லெப்டினன்ட் காளிதாஸ் (மௌனதாசன் விக்கினேஸ்வரன் 2 ஆம் குறுக்குத்தெரு கொழும்புத்துறை) வீரவேங்கை வசந்தன் (வசி - கந்தையா லோகேஸ்வரன் சுழிபுரம் மத்தி சுழிபுரம்) ஆகிய போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## பாடசாலைகள் மீது விமானக்குண்டு வீச்சு

(வடமராட்சி கிழக்கு)

வெற்றிலைக்கேணி ஆனையிறவு சுற்றாடலில் உள்ள பாடசாலைகள், கோயில்கள் ஆகியவற்றினை இலக்கு வைத்து சிறிலங்கா விமானப் படை விமானங்கள் குண்டுகளை வீசி வருகின்றன.

இக்குண்டுவீச்சினால் கோயில்வயல் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை சேதமடைந்துள்ளது

மாசார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மீது வீசப்பட்ட குண்டு அப்பாடசாலைக்கு அருகிலுள்ள வீடு ஒன்றின் மீது விழ்ந்து வெடித்துள்ளது.

இதேவேளை வெற்றிலைக்கேணி இராணுவ முகாமிலி (8 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய விவகாரத்தில் சிறிலங்கா இரட்டைப் போக்கு

### 'இந்து' விமர்சனம்

(சென்னை)

இந்திய மத்திய புலனாய்வு பணியகத்தின் சட்ட ஆலோசகர் கொழும்பு வர அனுமதிப்பதற்கு இலங்கை அரசு காட்டியிருக்கும் மறுப்பு கூடுதலான அளவுக்கு ஒத்துழைப்பு நிலைப்பாடொன்றை விடுதலைப் புலிகள் எடுக்கும் விதத்தில் அவர்களை சாந்தப்படுத்தும்ஒரு முயற்சியென கொழும்பிலுள்ள அவதானிகள் தெரிவிக்கின்றனர் என்று 'இந்து'ப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ராஜீவ்காந்தி கொலை வழக்கு தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை நாடு கடத்துவதற்கான இந்தியாவின் கோரிக்கை குறித்த சட்டப் பிரச்சினைகளை ஆராய சி. பி. ஐ யின் ஆலோசகர் கொழும்பு வர அனுமதி கேட்டிருந்ததும் அதனை சிறிலங்கா அரசு மறுத்திருந்ததும் தெரிந்ததே.

இதனைத் தொடர்ந்தே கொழும்பிலுள்ள அவதானிகள் தமது கணிப்பினைத் தெரிவித்ததாக 'இந்து' செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது ;

இலங்கை அரசாங்கம் இரட்டைத் தன்மையான ஒரு விளையாட்டை நடத்துகிறது. இந்தியாவிலிருந்து இரண்டு பொலிஸ் குழுக்களை இலங்கைக்குள் வர அனுமதித் (8 ஆம் பக்கம் பார்க்க)

## அலம்பில் பகுதியில் புலிகள் - ராணுவம் மோதல்

அலம்பில் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நேற்று முன்தினம் பெரும் மோதலொன்று ஏற்பட்டது.

பல நிமிடங்கள் இடம் பெற்ற மோதலில் சிறிலங்கா இராணுவதரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டது சிறிலங்கா இராணுவத்தினர் தண்ணீரூற்று பக்கமாக எறிகணைத் தாக்குதலை நடத்திவருகின்றனர்.

## புளொட் துப்பாக்கிச் சூடு ஒரு தமிழ் பொதுமகன் பலி

(வவுனியா)

வவுனியாவில் புளொட்தேசவிரோதிகளின்துப்பாக்கிச்சூட்டிற்கு ஒரு தமிழ் பொதுமகன் பலியாகியுள்ளார்.

நேற்றுக்காலை 10-35 மணியளவில் பேயாடிக்குளம் இராணுவக் காவலரண் பகுதியில் பொதுமக்களின் வாகனங்கள் சோதனையிடப்பட்டுக் கொண்டிருந்தன.

அப்போது அந்த நின்ற (8 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

### 2ஆம் லெப். சேரன்

வவுனியாவில் நேற்று முன்தினம் காலை 9.00 மணியளவில் இடம் பெற்ற வெடிவிபத்தில் 2-ம் லெப்டினன்ட் சேரன் (சித்திரவேல் தட்சனாமூர்த்தி, 91, 2-ம் யூனிட், தர்மபுரம், உதயநகர்) என்னும் போராளி வீரச்சாவு அடைந்தார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## முறையீடு

(யாழ்ப்பாணம்)

கடந்தகால இராணுவ நடவடிக்கைகள் மூலம் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுமார் இருபது அப்பாவிப் பொதுமக்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் கூட்டுப்படைகளின் தலைமை (8ஆம் பக்கம் பார்க்க)

## துர்க்கையம்மன் ஆலயம் மீது தவறுதலான குண்டுவீச்சாம்

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய கோபுரத்தின் மீது விழுந்த குண்டு வேண்டுமென்று போடப்பட்டதல்ல என்றும் தாக்குதலின் போது தவறுதலாக குண்டு விழுந்துள்ளது என்று சிறிலங்கா கூட்டுப் படை தலைமைப் பேச்சாளர் சரத் முனசிங்கா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர்கள் மாநாட்டில் சரத்முனசிங்கா இதனைத் தெரிவித்தார். கோயிலைச் சுற்றியுள்ள பகுதியிலிருந்து தாக்குதல் நடத்திய விடுதலைப் புலிகள் மீது திருப்பித் தாக்கிய போதே இச் சம்பவம் தவறுதலாக நடைபெற்றது என்றும் அவர் தெரிவித்தார்.

உலகிலே எந்தஒரு போராட்டத்திலும் ஆலயங்கள் மீது குண்டுகள் போடப்படுவதில்லை எமது நோக்கம் அதுவல்ல என்று அவர் குறிப்பிட்டார்.

## கொக்கட்டிச்சோலையில் பலியான 7 பேர் விபரம்

(மட்டக்களப்பு)

கொக்கட்டிச்சோலைப் பகுதியில் கடந்த வெள்ளி, சனிக்கிழமைகளில் இடம் பெற்ற சிறிலங்காஇராணுவத்தினரின் தேடுதல் நடவடிக்கைகளின் போது கொல்லப்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் ஏழு பேரின் விபரங்கள் கிடைத்துள்ளன.

நெல்லிக்காடு சாமந்திஆறு, புளுக்குனாமடு ஆகிய இடங்களிலேயே இவர்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும்,

வெள்ளாச்சி மாவிப் போடி, தங்கம்மா மாவிப் போடி, மாவிப்போடி பத்மநாதன் ஆகிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் வயலில் வேலை செய்து கொண்டிருந்த நேரத்தில் ஹெலி தாக்கி இறந்துள்ளனர் என்றும்,

கவிமடு என்னும் இடத்தில் மயிலர் சின்னத்தம்பி, அவரின் மனைவி தெய்வானைப் பிள்ளை சின்னத்தம்பி ஆகி (8 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**நீமியா உரம்**

நெற்பயிர், மற்றும் தோட்டப்பயிர்கள் அதிக விளைச்சலைத்தர, பூச்சி புழுக்களின் தாக்குதலிலிருந்து பாதுகாக்கப்பட நீமியா உரம். நம்பகமானது, சிக்கனமானது, வேம்பினை ஆதாரமாகக் கொண்ட தொரு உள்ளூர் உற்பத்தி நீமியா உரம். கிலோ ரூபா 15/- தொகையாக வாங்குபவர்களுக்கு கவர்ச்சிகரமான கழிவு. அண்ணா கோப்பிக் கடையிலும் கிடைக்கிறது.

--மில்க்வைற்

சி/4632


தமிழர்-முஸ்லிம்கள்

# மோதலை ஏற்படுத்த தீயசக்திகள் சதியாம்

(கொழும்பு)

தமிழ்க் கட்சிகளுக்கும் முஸ்லிம் காங்கிரசிற்கும் இடையில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தையைக் குழப்பி அவ்விரு சமூகங்கள் மத்தியில் மோதலை ஏற்படுத்துவதற்கு சில தீயசக்திகள் முயற்சிப்பதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இக்கட்சி விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே இதுபற்றித் தெரிவித்துள்ளது.

# பௌத்தகாங்கிரஸ் தலைமை அத்துலத்முதலி முயற்சி

(கொழும்பு)

அகில இலங்கை பௌத்த காங்கிரசின் தலைமைப் பதவிக்கு முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி முயற்சி செய்வதாக தெரிய வருகின்றது. இக்காங்கிரசின் மாநாடு எதிர்வரும் ஜூலை மாதத்தில் நடைபெறும்போது அரசியல்வாதி ஒருவரும் இப்பதவிக்கு நியமனம் பெறும் வகையில் யாப்புவிதிகளைத் திருத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது.

ராஜீவ் கொலை வழக்கில் ஆஜராக

# தகைமை உண்டா என மோதிலால் கோருகிறார்

ராஜீவ் கொலை வழக்கு சந்தேக நபர்கள் தரப்பில் இந்திய நீதிமன்றத்தில் ஆஜராக தனக்கு தகைமை உண்டா என்ற விபரங்களை ஜனாதிபதி சட்டத்தரணி மோதிலால் நேரு தமிழ்நாடு சட்டத்தரணிகள் சங்கத்திடம் கேட்டுள்ளார்.

தமிழ்நாடு நீதித்துறை சட்டத்தின்படி இதற்கான தகைமைகள் தனக்கு இருந்தால் மட்டுமே தன்னால் எதிரிகளின் சார்பில் ஆஜராகி வாதாட முடியுமென மோதிலால் நேரு தெரிவிக்கிறார்.


புங்குடுதீவு - நயினாதீவு ப.நோ. கூ. சங்கம்,வ.து

## பங்கீட்டு அட்டைகளை ஒப்படைத்தல்

சகல பாவனையாளர்கட்கும்;

யூலை 1992 மாதத்திற்கான இலவச உலர்உணவு விநியோகத்தை விரைவில் விநியோகம் செய்வதற்காக தங்களுடைய பங்கீட்டு அட்டைகளை உடன் எமது சங்க கிளைகளில் ஒப்படைக்கவும்,

பதில் பொது முகாமையாளர்.

(சி 4640)



## ஸ்ரீதர் திரையரங்கில்

தினசரி மாலை 4.00 மணிக்கு

சனி, ஞாயிறு தினங்களில்

மாலை 4.00 6.00 மணி

காட்சிகளாக காண்பிக்கப்படுகிறது

புதிய வெளியீடு

## EAGLE HAS LANDED

(கழுகு தரையிறங்கி விட்டது)

[4597]



## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



வீர ஜனனம் 25-5-72

வீர மரணம் 16 6-91

### லெப்டினன்ட் ஜெராட்

(சரவணமுத்து சிறிஸ்காந்தராசா)

திதி: 3 - 7 - 91

உசன், மிருசுவில். (2751) குடும்பத்தினர்


ஊரியான் பாதையில்

## துப்பாக்கிச்சூடு ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

ஊரியான் பாதையூடாகக் குடாநாட்டுக்குள் வந்து கொண்டிருந்த பயணிகள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் நடாத்திய துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று நடைபெற்ற இச்சம்பவத்தின போது பண்டத்தரிப்பு அம்மன் கோயிலடியைச் சேர்ந்த எம். அல்பிரட் (வயது 27 என்பவரே படுகாயமடைந்திருக்கிறார். (க)

## பல்கலைக்கழகத்தில் 5 நாடகங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று காலை 9 30 மணிக்கு ஐந்து நாடகங்கள் இடம்பெற உள்ளது. இந்த நிகழ்ச்சியை பல்கலைக் கழக ஆங்கில மன்றம் ஒழுங்கு செய்துள்ளது.

யாழ் இந்து மகளிர் கல்லூரியினர்வழங்கும் அபிஜித் சாக்கார்இன் 'Child's play' யாழ். உடுவில் மகளிர் கல்லூரியினர் வழங்கும் பேர்னாட் டடியின் 'The Village' யாழ் உடுவில் மகளிர்கல்லூரியினர் வழங்கும் குழந்தை ம. சண்முகலிங்கத்தின் 'முயலார் முயல்கிறார்' (சிறுவர் நாடகம்) வேலணை மத்திய மகா வித்தியாலயத்தினர் வழங்கும் ம.நிலாந்தனின் 'யுத்தத்தின்நாட்கள்' உடுவில் மகளிர்கல்லூரியினர் வழங்கும் ம. நிலாந்தனின் 'அகதிகளின் கதை' ஆகியநாடகங்கள் நடைபெற உள்ளன.

## 'குமணவில்' உரம்

(யாழ்ப்பாணம்)

123 இலட்ச பெறுமதியான 1500 தொன் உரம் யாழ். அரச அதிபர்,கடன் நிதி மூலம் கொழும்பில் இருந்து கொள்வனவு செய்து யாழ்ப்பாணம் எடுத்துவர நடவடிக்கை எடுத்துள்ளார்.

எதிர்வரும் 5-ம் திகதி கொழும்பில் இருந்து பருத்தித்துறையை வந்தடையும் குமண கப்பலில் இவ் உரம் எடுத்து வரப்பட உள்ளது. (பா)

### நனவாகிய

வெறிகொள் தமிழர் புலிப் படை அவர்

வெல்வார் என்பது வெளிப் படை''

என்பது அர்த்தம் நிறைந்த தொன்றாகின்றது அத்துடன், கருவினில் அன்னை வளர்த்தது. கைகளைத் தந்ததும் செருவினில் வெற்றிக் கொடியுடன் நின்று சிரிப்பதற்கே என்று கவிஞனுடன் சேர்ந்து நாமும் பாடவேண்டும் என்ற உணர்ச்சி உந்துகின்றது.


# நினைவு கூருகின்றோம்...

## 1992-07-03

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் சிறிலங்கா அதிரடிப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

குஞ்சு [ம. அருள்தாசன் - மட்டக்களப்பு]

அம்பாறை / திருக்கோயில் தாண்டியடிப் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

எஸ். பி,

சலீம்

சின்னத்தம்பி

இதே பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

லக்கி [சருவேப்பங்கேணி, மட்டக்களப்பு ]

மட்டக்களப்பில் கோயில் திருவிழாவில் கலந்து கொண்டிருந்தபோது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட காட்டுமிராண்டித்தனமான துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட 17 தமிழர்கள் - படுவான்கரை, பாவற்கொடிச்சேனைப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு மட்டக்களப்பு - காளை போட்டமடுப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது ஏற்பட்ட மோதலில் விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

2-ம் லெப் சங்கிலி / சஞ்சீவி [காசுபதி வடிவேல் - ஆரையம்பதி - 3, மட்டக்களப்பு ]

மட்டக்களப்பு ஆரையம்பதிப் பகுதியில் இந்தியப் படையினர் மற்றும் தேசவிரோத சக்திகளினால் கைது செய்யப்பட்டு அடித்துக் கொலை செய்யப்பட்ட

நோபேட் [தல்லையா சிறிபாலா - ஆரையம்பதி, மட்டக்களப்பு ]

கிளிநொச்சி வட்டக்கச்சிப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

2-ம் லெப். ரவியம்மான் (ஐயம்பு தெய்வேந்திரம் - ஓமந்தை, வவுனியா.)

முல்லைத்தீவு - விசுவமடுப்பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடிமோதலில் வீரச்சாவெய்திய -

2 ஆம் லெப். மரியா (புவனேந்திரசோதி புலேந்திரன் - சித்தாண்டிகேணி, வட்டுக்கோட்டை கிழக்கு)

மணலாறு - ஊளம் பிடிப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் வீரச்சாவெய்திய -

ராதை (விக்கினேஸ்வரி கணேசு - இராசவீதி, சுரந்தன் சந்தி, நீர்வேலி)

மணலாறு - நெடுங்கேணிப் பகுதியில், இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட பெண், குழந்தை ஆகிய இரண்டு தமிழர்கள்.

1989 ஆம் ஆண்டு புளியங்குளத்தில் இந்தியப்படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

விஜி (க. சந்திரகாந்தன் - கொக்குத்தொடுவாய், மணலாறு.)

வவுனியா ஓமந்தைப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப்பெண்.

கிளிநொச்சியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 6 தமிழர்கள்.

1990 ஆம் ஆண்டு திருக்கோணமலை, சூரன்கல் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

மேஜர் பவான் (சாந்தலிங்கம் நாகேந்திரராசா - 3-ம் கொலனி, கிளிவெட்டி, மூதூர், திருக்கோணமலை.)

ரஜனி (நடேசலிங்கம் சங்கர் - தம்பலகமம், திருக்கோணமலை.)

பல்லவன் [நடராசா யோகராசா -நொச்சிக்குளம் ]

மன்னார் ஆலங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

லெப் கபாலி [அ நாகராசா-பேசாலை, மன்னார்]

அம்பாறை கோமாரி இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்துக் கைது செய்யப்பட்டுக் காணாமல் போன - பொத்துவிலைச் சேர்ந்த 10 தமிழர்கள்.

மட்டக்களப்பில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பின் எரிந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்ட 5 தமிழர்கள். கதிரவெளிப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட சிறுவன், இளம் பெண் உட்பட 3 தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு திருக்கோணமலை போராற்றுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

மோகன் [வீரக்குட்டி அருச்செல்வம் - 1062, 9-ம் குடியிருப்பு, தம்பலகமம், திருக்கோணமலை ]

ராஜு [சுப்பையா கனகராசா - கன்னியா, திருக்கோணமலை.]

சிறில் (சைமன் மாத்தூஸ் - 385, செல்வநாயகபுரம், திருக்கோணமலை.)

குமாரன்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/4638)




'அழகன் வீரச்சாவடைந்துவிட்டான்' இதயத்தை ஊடுருவி அசைத்து ஆட்டிப் பார்க்கும் செய்தி.

அவன் சிரித்த முகத்துடன் அலையும் வீதிகள் வெறிச்சோடிப்போய்க் கிடந்தன.

'உண்மையாகவா' அவ் வீதிகளின் வழியே அவனைப்பார்த்ததும் அழகன் மாமா என்று மகிழ்ச்சியுடன் கையசைக்கும் சின்னஞ்சிறுசுகள் ஏக்கத்துடன் நின்றனர்.

ஈழநாதத்தின்வாசல்... அவர்கள் அனைவரும் அழுதபடி... அவர்களால் இவனின் இழப்பை எப்படித் தாங்க முடியும்...? முடியாது. அழட்டும் நன்றாக அழட்டும் இதயத்தின் ஈரம் காயும் மட்டும் அழட்டும்.

போராளிகளின் உடல்களை பக்குவப்படுத்தும் இடம்.

அழகன் கட்டிலில் படுத்துக் கிடந்தான். வழமை மாதிரியே கைகளை அகலப்போட்டபடி சாதுவான சிரிப்புடன்... அவன் சாவைச் சந்தித்து விட்டானா ? யார் சொன்னது? அவனது வயிற்றில் இருந்த சிறிய காயத்தால் இரத்தம் கூட வடியாத நிலையில் அவன் சாவை அணைத்து விட்டானா.

''அழகன் டே ... அழகன்'' தோழனொருவன் அவனது கன்னத்தில் தட்டிவிட்டு அழுதான். காற்றில் கலந்த சோகம் உலகத்தின் அசைவுகளை அப்படியே நிறுத்தி இருந்தன.

இவனதுஇழப்பை, வீதிகளில் நின்று கையசைக்கும் அந்தச் சின்னஞ் சிறுசுகளும் இவனை அன்புடன் நேசித்த இந்ததேசத்தின் மக்களும்,

சிறிய விபத்தொன்றில் இவனது தம்பியை முன்னமே இழந்துவிட்ட இவனது தாயும் தந்தையும், தங்கள் சகோதரனின் உயிரையே வைத்திருக்கும் சகோதரிகளும் எப்படித் தாங்கிக்கொள்ளப் போகிறார்கள்.

அதைவிட,

இவனுக்காகவே காத்திருக்கும் இவனின் அவள்.. இவனின் இழப்பை எப்படித்......

அவள்மட்டுமா? எந்தவேலை என்றாலும் அழகனைத்தேடும் இவனது தோழர்கள்..

யாருக்கு யார்ஆறுதல்சொல்வது.

★ ★ ★

அழகன்

முல்லை மண்ணின் குழந்தைகளில் அவனும் ஒருவன். அந்த மண்ணின் உயிரில் கலந்து அங்கு வாழும் மக்களின் இதயங்களில் குடிசை கட்டி வாழ்ந்தவன்.

தண்ணீருற்றுப் பகுதிக்கு அரசியல் வேலை செய்வதற்கு வரும் பொழுது அழகன் சின்னப் போராளி இவனுக்கு அழகன் என்ற பொருத்தமான பெயரை யார் வைத்தார்கள். இந்தக் கேள்வியை அந்தக் கிராமத்தில் யார் தான் கேட்கவில்லை.

''இந்தத் தேசம் விடுதலை பெற வேண்டும்' என்ற அந்தக் கிராமங்களில் இந்தக் குயில் குரலெடுத்துப் பாடத் தொடங்கியது. ஒரு வருடம் கடந்த பொழுது அழகன் அந்தக் கிராமத்தின் செல்லக் குழந்தையாக மாறிவிட்டான். அவனுக்கு பின்னால் 'சுதந்திரம் எங்கள் உயிர் மூச்சு' என்று கொண்டே அப்பகுதி மக்கள்அணிவகுத்துநின்றனர்.

அந்த இனிய நாட்கள் தான் எப்படிப்பட்டதென்று பாருங்களேன்! ஒரு மிதி வண்டியில் மடித்துக் கட்டாத சாரத்துடன் நிற்கும் அழகனைப் பார்த்து 'அழகன் மாமா...... போட்டுவாறம்'' என்று கொண்டே பாடசாலை செல்லும் சிறுவர் கூட்டம் காலையில் கடக்கும் சிறிது நேரம் சென்ற பின் ''தம்பி மத்தியானம் சாப்பாட்டுக்கு வாடா'' என்று இவனது கன்னத்தை தடவிவிட்டு செல்லும் அம்மாமார் மாலையில் ''தம்பி தலைவர் என்ன சொல்லுறார்'' என்றபடியே அரசியல் கதைக்கும் அப்புமார், நேரம் என்று பாராமல் இவனுடன் இவன் சொல்வதைச் செய்து கொண்டு திரிந்த இளைஞர்கள் என்று அழகன் யாரோடு தான் கலக்கவில்லை ...

இராணுவ நடமாட்டம் அதிகமான நெருக்கடி மிகுந்த அந்த நாட்களில் அந்தக் கிராமங்களில் அழகன் விடுதலைப் பயிரை வளர்க்க முயன்றான் அந்நேரம் தான் அவர்களுக்குள் அன்பு முளைவிட்டது.

அந்த நாட்களில் யாழ்ப்பாணத்தை கவிந்திருந்த போர் மேகங்களின் விளைவாக நாவற்குழி இராணுவ முகாம் காவல் நிலைகளுக்கு அழகன் மாற்றப்பட்டான். காவல் நிலைகளின் ஒரு தொகுதிக்கு பொறுப்பாக இருந்த மேஜர் தாடிபாலாவின் குழுவில் அவனும் ஒருவனாக இருந்தான்.

அங்கும் பாலாவினதும் மற்றைய தோழர்களினது அன்புக்கும் அவன் விரைவிலேயே ஆளாகிப் போனான். பாலாவிற்கு அழகன் எப்போதும் அருகில் இருக்க வேண்டும் என்ற உணர்வு இதயத்தில் ஊறிப்போய் விட்டது.

அந்தப் போராளிகள் சிங்கள படைகள் எந்த முனையால் முன்னேற முயன்றாலும் அங்கு நின்றனர். ஆக்கிரமிப்பு வாதிகளின் முயற்சிகளை முறியடித்து இந்த மண்ணைக் காத்தனர். அப்போதெல்லாம் அழகன் ஓர்எந்திரனை செலுத்தியை வைத்திருந்து சண்டையிட்டான்.

இந்திய-இலங்கை ஒப்பந்தமும் அதைத் தொடர்ந்து ஓர் போர் நிறுத்த காலமும் வந்த பொழுது அழகனை மாத்தையா அண்ணை தன்னுடன் அழைத்துச் சென்றிருந்தார் இந்தியர்களுடனான போர் தொடங்கும் வரைக்கும் பல்வேறுபட்ட அரசியல் வேலைகளை அழகன்செய்து கொண்டிருந்தான்.

இந்தியர்களுடனான போர் தமிழீழமெங்கும் எழுந்த பொழுது பல்வேறு பகுதிகளிலும் நின்று அழகனும் போராடினான். அன்னிய ஆக்கிரமிப்பு வாதிகளின் அராஜகத்திற்கு இந்தத் தேசம் அடிபணிந்து போகாது என இந்த மண் நிமிர்ந்து நின்று போராடியது. தென்மராட்சிப் பகுதியில் நின்று செயற்பட்ட அழகன் அதன் பின்பு வன்னிக்கு வரவழைக்கப்பட்டான்.

வன்னியில் மேஜர் தாடி பாலாவின் அணியில் ஒருவனாக நின்று போராட்டக் களத்தில் செயற்பட்டான். அக்காலங்களில் முல்லைத்தீவு மாவட்டத்தில் புதிதாகதொடங்கப்பட்ட பயிற்சி முகாம் ஒன்றின் பயிற்சி ஆசிரியராக அழகன் நியமிக்கப்பட்டான். இந்தியர்கள் இம்மண்மீது ஓர் போரினைத் தொடுத்த பின்பு தமிழீழமண்ணில் நடத்தப்பட்ட புலிகளின் முதலாவது பயிற்சி முகாம் அதாகத்தான் இருந்தது.



மேஜர் அழகன்

அதன் பின்பாக, வன்னிக் காடொன்றில் இயங்கிய அரசியல் தலைமையகத்திற்கு அழகன் மாற்றப்பட்டான். அந்த முகாமின் வெளித்தொடர்புகளை கவனிக்கும் பொறுப்பு அவனுடையதாக இருந்தது. அந்நேரங்களில் அக்காட்டு முகாமிலிருந்து வெளியிடப்பட்ட ''உணர்வு'' ''சுதந்திரப் பறவைகள்'' ஆகிய சஞ்சிகைகள் வெளிவரத் தேவையான கல்லச்சுத்தாள், மை போன்றவற்றைத் கொள்வனவுசெய்து கொடுக்கும் பொறுப்பு அழகனிடமிருந்தது.

அதன் தொடராகத்தான் இந்தியர்கள் வெளியேறத் தொடங்கியதும் ஈழநாதம் பத்திரிகையை நடத்தவேண்டிய பொறுப்பு அழகனிடம் ஒப்படைக்கப்பட்டது. உண்மையில் சொல்வதாக இருந்தால் என்ன? ஈழநாதம் முதலாவது இதழ் வெளிவந்தபொழுது குடாநாட்டின் பலஇடங்களில் இந்தியர்கள் இருந்துகொண்டு தான் இருந்தார்கள்.

வன்னி மக்களால் அன்போடு 'எங்கட அழகன்' என்று அழைக்கப்பட்ட அவன் இப்போது ஈழநாதம் அழகனாக மாறி இருந்தான். பத்திரிகை உலகத்தில் புதியவனாய் புகுந்த அழகன் அதில் மிகவிரைவாகவே தேர்ச்சி பெற்றான்.

இரண்டு வருடங்கள் கடந்த பொழுது பத்திரிகை உலகில் சகல நுணுக்கங்களும் தெரிந்ததோர் சிறந்த நிர்வாகியாக அவன் மாறியிருந்தான். ஒரு சில வசதி வாய்ப்புக்களுடன் தொடங்கிய ஈழநாதம் இன்று பெரியதொரு நிறுவனமாக மாறி நிற்கின்றது.

இப்போதெல்லாம் அழகன் சிறியவனல்ல.... தேர்ச்சி நிறைந்த நிர்வாகி மிக எளிமையாக பெட்டிக் கடைகளிலும், பெரும் முதலாளிமார்களுக்கு முன்னாலும் இருந்து கதைப்பான். வியாபார உலகத்தின் அசைவுகளை அவன் கண்கள் நன்றாகவே அறியும்.

ஆனால் மறுகணம் போராளிகளுடன் போராளியாகவும் நிற்பான். ஆனையிறவில் நடக்கும் சமரில் காயமடையும் போராளிகளை குண்டு வீச்சு விமானங்களிற்கு இடையால் வைத்திய சாலைக்கு கொண்டுவந்து சேர்க்கும் சாரதியாக மாறிப்போவான்.

'ஈழநாதம் அதன் வளர்ச்சி' இதுவே அவனது பேச்சும் மூச்சுமாகப் போனது. எந்த நெருக்கடிகள் வந்தாலும் ஈழநாதம் வெளிவரவேண்டும். இது அவனது இதயத்தின் ஆவல். குடாநாடு எங்கும் குண்டுகள் விழுந்து வெடித்துக் கொண்டிருந்தாலும் இயந்திரத்திற்கு அருகில் இவன் விழித்துக்கொண்டிருப்பான்.

ஈழநாதம் பணியாளர்களுக்கு அவன் ஓர் அண்ணன். அத்துடன் நிர்வாகப் பொறுப்பாளன். அவர்கள் ஓர் இனிய குடும்பம் விடுதலை உணர்வை விதைப்பது அவர்களின் கடமையாக இருந்தது.

அன்றும் அப்படித்தான் நடந்தது. புகைப்படம் எடுக்கும் தோழனொருவனுடன் போர் முனைக்குச் செய்திகளை சேகரிக்கச் சென்ற அழகனுக்கு அருகாக வீழ்ந்த குண்டொன்றின் சிதறல் அழகனின் வயிற்றில் தைத்தது. அது சிறிய காயம் என்றுதான் அவனும் அவனது தோழர்களும்நினைத்தார்கள் ஆனால்... உடலின் உள்ளே அவனது உயிரை இவ்வளவு வேகமாகக் குடிக்கும் ஆழமான காயம் இருந்ததை யாரும் அறியவில்லை.

அழகன் சாவைச் சந்தித்து விட்டானாம். யார் இந்தச் செய்தியை நம்புவார்கள்.

அழகனைச் சுமந்த கொண்டு வேகமாக அந்த வீதிகளில் வேகமாக ஓடும் அந்தச் சிவப்பு நிற வண்டி இன்றும் அவனைச் சுமந்துகொண்டு துயரத்தோடுமிக மெதுவாக...

இரவுகளில் அழகன் படுத்துறங்கும் ஈழநாதத்தின் முன் மண்டபம் அதில் இன்றும் அழகன் படுத்திருக்கிறான். அவன் சிரித்த முகத்தை பார்த்து மகிழ்பவர்களெல்லாம் இன்று கண்ணீரோடு...

அழகா! உன்கண்களை அகல விரித்து ஒருதரம் பார் உன்னைச் சுற்றி நின்று அழுபவர்கள் யார்!

அம்மா... அப்பா .. உன்உறவுகள் மட்டுமா.. உன் காதலியும் தோழர்களும் ஏன் இந்தத்தேசமும் உனக்காக கண்ணீர் வடிக்கின்றார்கள்.

- வசந்தன்

## நிஜமென்ற பின்னாலே...!

ஓ..... எங்கள் நாத நிர்வாகியின் அந்தச் செய்தி.....

நம்பினோமா...? அழகன் இல்லையென்ற அவலமான அந்த செய்தியினை அண்ணன் ஜெயராஜ் எடுத்து வந்து காற்றோடு கலந்தபோதும் நம்பினோமா ?

படிகளிலே ஏறி வந்து நம்முடன் பகிர்ந்தவைகள் எல்லாம் அன்றைய நிகழ்வுகள். ஆனால் அவைதான் எமது இன்றைய நினைவுகள்!

நாத நரம்புகளினை மீட்டிப் பார்க்கும்போதும் சோக நினைவுகள் எங்கள் நெஞ்சங்களினை இறுக்கிப் பிடிக்கிறதே அது ஏன்? ஓ... அது உன் கடமையின் மகிமை. கண்டிப்புடன் கடமையாற்றி இருந்தால் நமது கவலைகளும் சற்றுக் குறைவடைந்திருக்கும். ஆனால் கனிவுடன் கடமையாற்றியதாலோ எங்கள் கவலைகளும் அதிகமானது இன்று.

தென்மராட்சி மண் தந்த வீர மறவனை காலனவன் பறித்த செய்தி நிஜமென்ற பின்னாலே நமது ஊழியர்கள் ஒவ்வொருவரும் தமது மகனை இழந்ததுபோல், சொந்த சோதரனை இழந்ததுபோல் உற்ற நண்பனை இழந்தது போல் பட்ட தவிப்பு. துடிப்பு, கலக்கம், ஏக்கம், எழுத்துக்களுக்குள் அதை அடக்க முடியுமா ?

இந்த இளவயதில் இப்படியோர் நிர்வாகத் திறமையென்றால் இன்னும் சில வருடங்கள் போனால்..... வியந்ததுண்டு, கதைத்ததுண்டு. ஆனாலும் உனது நிர்வாகத் திறமைகளை நமது ஊழியர்கள் பார்ப்பதற்கு முன்னால் விதையாகிப் போனவன்தான்மேஜர் அழகன்.

உனது இழப்பால் உருகும் பெற்றோருடன், தவிக்கும் சோதரிகளுடன், துடிக்கும் காதலியுடன், கலங்கும் நண்பர்களுடன் நாமும் இணைந்து கொண்டு இந்த மஞ்சரியில் எமது கண்ணீரை காணிக்கையாக்குகிறோம்.

ஈழநாதம்

சோதர, சோதரிகள் சார்பில்

மாலினி.

# தண்ணீர்

சிறுகதை

அலெக்ஸ் பரந்தாமன்

வருட இறுதியில் பெய்ய வேண்டிய அந்தப் பருவகால மழை இன்னும் பெய்வதாகத் தெரியவில்லை வானம் கண்ணுக்கெட்டிய தூரம்வரை வெளிர் நீலமாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தது ஆங்காங்கே ஓரிரு வெண்மேகக் கூட்டங்கள் காற்றின் இசைவிற்கு மெதுவாக ஊர்ந்து சென்று கொண்டிருந்தன.

நிலமெங்கும் நிறைந்து கிடந்த செம்பாட்டு புழுதி காற்றோடு கலந்து விளையாடிக் கொண்டிருந்தது. வானம் சிந்தும் கண்ணீரைக் காணாது ஏக்கத்தின் பிரதிபலிப்புகளாக செடி கொடி மரங்கள் யாவும் விரக்தியடைந்து போய்விட்ட மனோநிலையில் சோம்பிப் போய் நின்றன.

பாலமுருகன் குடிசையை விட்டு வெளியே வந்து வானத்தை அண்ணாந்து பார்த்தான். இரண்டு இளஞ்ஜோடிப் பறவைகள் மிக நெருக்கமாக வானத்தில் இறக்கையடித்துப் பறந்து கொண்டிருந்தன.

"இந்த முறை மழை சனத்தை நல்லா ஏமாத்திப் போட்டுது.." எனத் தனக்குத் தானே வாய் விட்டுக் கூறிக் கொள்கிறான்.

அவன் கூறியது குசினிக் கொட்டிலுக்குள் இடியப்பம் பிழிந்து கொண்டிருந்த பாலமுருகனின் அக்காள் பார்வதியின் காதுகளில் கேட்டு விட்டது.

"தம்பி..." என அழைத்தாள் பார்வதி.

"என்னக்கா..." என்றவாறே குசினிக் கொட்டிலுக்குள் நுழைந்தவன் இருப்புப் பலகையை எடுத்துப் போட்டுவிட்டு அதிலே அமர்ந்து கொண்டான்.

"தம்பி அடுத்த வருசம் எண்டாலும் வளவுக்குள்ளை கிணறு ஒண்டு வெட்டப் பார்க்க வேணுமடா... நெடுகிலும் இன்னொரு வீட்டிலே போய் தண்ணி அள்ள ஏலாது. அந்த இணுத்து வளவுக்காரி பவானியின்ரை குணம் நடை அவ்வளவு நல்லாயில்லை. அவள் இஞ்சை தண்ணி அள்ள வர வேண்டாம்... என்று சொல்லுறதுக்கு முன்னமே நாங்கள் போகாமல் விடுகிறது நல்லது..."

பார்வதி கூறியதைக் கேட்டு பாலமுருகன் சிந்தனையில் ஆழ்ந்தான். உருண்டு, தடித்த உடல்வாகு கொண்ட பவானியின் தோற்றம் அவன் கண்ணுக்குள் நிழலாடியது. தனியொரு மனிதனுடைய வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்படுவதை விரும்பாத மனோவளர்ச்சியில் ஊறி வளர்ந்தவள் பவானி. கணவன் வெளிநாட்டில் இருந்து அனுப்பும் பணத்தில் அரைவாசி அந்தக் கிராமத்தில் உள்ள ஏழை எளியவர்களின் கைக்குள் கடனாக மாற்றி, பின் அதை அவர்களிடமிருந்து மீளும்போது வட்டி எனும் பெயரோடு கொடுத்த பணத்திற்குக் கூடுதலாக அறவிட்டுக் கொள்ளும் அவளது குண இயல்பினை நினைத்து அவன் இவ்வேளை சிந்திப்பதுண்டு.

அந்தக் கிராமத்தின் வடக்கே உள்ள மேட்டுப்புறத்தில் அவர்கள் குடியிருப்பதால்சராசரி ஒவ்வொரு கிணற்றின் ஆழமும் முப்பத்தைந்து நாற்பது முழமாக இருந்தது.

பாலமுருகனினால் கூலி கொடுத்து இவ்வளவு ஆழத்திற்கு கிணறு வெட்ட அவனது பொருளாதார சூழ்நிலை இடம் கொடுக்கவில்லை. அவனைப் போலவே அந்த மேட்டுப்புறத்தில் வேறு சில குடும்பங்களும் வாழ்ந்துகொண்டிருந்ததினால் அவர்களும் பவானி வீட்டுக் கிணற்றினையே நம்பிவாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

அதற்கிடையில் கப்பி, வாளி மற்றும் கயிறு முதலியன பழுதாகி விட்டால் அந்தக் கிணற்றில் தண்ணி அள்ள வருபவர்களிடம். பலவித காரணங்கள் சொல்லி பணம்வாங்கி விடுவாள் பவானி. ஏழை மக்கள் அவர்களால் என்னசெய்ய முடியும்...? அந்தக் கிணற்றை விட்டால் அரைமைல் தூரம்சென்று தண்ணீர் அள்ளிவர முடியாத காரணத்தால் அவள் கேட்கும் பணத்தை கொடுத்துவிடுவார்கள்.

"டேய் தம்பி... சாப்பிட்டுவிட்டுபோய் ஒருகுடம் தண்ணி அள்ளிக்கொண்டு வா..." அக்காள் பார்வதியின் குரல்கேட்டு அவனது சிந்தனை கலைந்தது.

'பிறகுவந்து சாப்பிடுவம்' எனக்கூறியவன் தண்ணீர்க் குடத்தை எடுத்துக் கொண்டு படலைத் தட்டியை திறந்து ஒழுங்கையில் இறங்கி நடந்தான்.

பாலமுருகனுக்கும் முத்துசாமிக்கும் என்ன செய்வதென்றே தெரியவில்லை ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள்.

"பார்த்தியாண்ணை வீட்டுக்காரி சொல்லுகிறதை. தண்ணி அள்ளின குற்றத்துக்காக கிணற்றிலை தண்ணி இல்லையெண்ட உடனே, நாங்களே கிணறு வெட்டிக் குடுக்க வேணுமாம். நாளைக்கு இஞ்சை கிணறு வெட்ட வந்தால் எங்களுக்கு நாளைய சீவியம் ஆர் தாறது.....? நாங்கள் அன்றாடு உழைச்சு தின்னுற கூட்டம். அவவுக்கு வெளிநாட்டுப் பணம்தான் தாராளமாய் வருகுதே...ஒரு நாலு கூலியைப் பிடித்து கிணற்றை வெட்டினால் என்ன.....?

கிணற்றடியில் பவானி குளித்துக்கொண்டிருந்தாள். பாலமுருகன் பவானியின் வீட்டு வளவுக்குள் நுழைந்தபோது படலையடியில், அங்கே அவனைப்போல வழக்கமாக தண்ணி அள்ளவரும் முத்துசாமி மண்குடத்தைகாலடியில் வைத்துவிட்டு குந்திக்கொண்டிருந்தான்.

"ஏன் அண்ணை தண்ணி அள்ளவில்லை...?" என முத்துசாமியை பார்த்துக்கேட்டான் பாலமுருகன்.

"தண்ணி அள்ளத்தான் தம்பி வந்தனான் வீட்டுக்காரி குளிச்சுக்கொண்டுநிக்கிறா" எனக்கூறினான் முத்துசாமி.

ஒரு அரை மணித்தியாலம் வரை அந்த இடத்தில் இருவரும் ஒருகுடம் தண்ணீருக்காக தவம் கிடந்தார்கள்.

'வளவுக்குள்ளை கிணறு இல்லாதது இப்பதான் தெரியுது; பிச்சைக்காரன் மாதிரி இன்னொருவனுடைய வளவிலை வந்து. இப்படியே நாய் மாதிரி காத்துக்கொண்டிருக்க வேண்டியிருக்கே' என தனது தலைவிதியை நொந்துகொண்டான் பாலமுருகன்.

ஒருவாறாக பவானி தனது ஸ்நானத்தை முடித்துக் கொண்டு அவர்கள் இருக்கும் இடத்தினை நோக்கி நடந்து வந்தாள்.

"இஞ்சை பாருங்கோ. எல்லாரும் இங்கை வந்து தண்ணி அள்ளிக் கொண்டு போறியள். ஆனால் தண்ணியோ வற்றிக் கொண்டுபோய் இப்ப பட்டக் கிடங்கிலை நிற்குது. இப்படியே போனால் பிறகு எங்களுக்கே பாவிப்புக்கு தண்ணி இல்லாமல்போயிடும் அதாலை நாளைக்கு எல்லாரும் வந்து கிணற்றை இன்னும் ஆழமாகத் தோண்டினால், பிறகு தண்ணி நல்லா ஊறும். நீங்கள் நாளைக்கு காலமை வரேக்கை இஞ்சை தண்ணி அள்ளுகிற மற்ற ஆட்களுக்கும் விசியத்தை சொல்லி அவையளையும் கூட்டிக்கொண்டு வாங்கோ" அவள் கூறிவிட்டு சென்றுவிட்டாள்.

பாலமுருகன் கூறிய வார்த்தைகளை கேட்ட முத்துசாமி சிரித்துவிட்டு கூறினான்.

"இல்லாதவனைப் பார்த்து இருக்கிறவன் சிரித்தால். இருக்கிறவனைப் பார்த்து இறைவன் ஒருநாள் சிரிப்பான் தம்பி......"

பிழிந்த தேங்காய்ப்பூவினை நெல்லிமரத்தின்கீழ் நின்ற கோழிக்குஞ்சுகளுக்கு போட்டுக் கொண்டிருந்தாள் பார்வதி இடதுபக்க தோள்மூட்டு வலியெடுக்க. தண்ணீர்க் குடத்தை நெல்லிமரத்தின்கீழ் வைத்துவிட்டு, பவானி சொன்ன கிணறு வெட்டும் விடயத்தை அக்காளிடம் ஒப்புவித்தான் பாலமுருகன்.

"உதுக்குத்தான் நான் ஏற்கனவே வளவுக்குள்ளை ஒரு கிணறு வெட்டவேணும் எண்டு சொன்னனான்..."

"நீ என்னக்கா புரியாமல் பேசுகிறாய்... இப்ப கிணறு வெட்டுகிறது என்டதுலேசான காரியமே ... முப்பத்தைந்து நாற்பது முழத்திற்கு வெட்டுறதுக்கு குறைஞ்சது ஐயாயிரம். ஆறாயிரம் வேணும ..... அதுக்கு இப்ப நான் எங்கை போறது......?

தம்பியைப் பரிதாபமாகப் பார்த்தாள் பார்வதி. அவள் குரலில் இயலாமையில் ஏற்படும் வேதனை துல்லியமாக துளிர்விட்டு மறைந்தது.

"சரி. சரி நாளைக்கு நாளைக்குள்ள பாடு. நீ வந்து இப்ப சாப்பிடு........" என தம்பியின் மனதை சமாதானப் படுத்தும் வகையில் கூறிவிட்டு சாப்பாட்டுக் கோப்பைகள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் பரணை நோக்கி நடந்தாள்.

மறுநாள் காலை பவானி வீட்டுக் கிணற்றுக்குள் முப்பத்திஏழு முழ ஆழத்தில் பாலமுருகனும், முத்துசாமியும் பிக்கான், மண்வெட்டி சகிதம் மண்ணை ஆழமாக கொத்திக் கொண்டிருந்தார்கள். வெளியே கயிறு பிடிப்பதற்கென பெண்களும் சிறுவர்களுமாக நின்று கொண்டிருந்தார்கள்.

அப்போது அவ்விடத்தில் நின்று பவானி கயிறு பிடித்துக் கொண்டிருந்த பெண்களில் ஒருத்தியைக் கேட்டாள்.

"ஏன் சின்னாச்சி உன்ரை மனுசன் வராமல் நீ வந்திருக்கிறியே......!"

"அவர் இஞ்சை வந்திட்டா இன்டைக்கு நமக்கு சாப்பாட்டுக்கு என்ன செய்கிறது......?

அதனால் தான் அவரை வேலைக்கு போகச் சொல்லி விட்டு நான் கயிறு இழுக்க வந்திட்டேன்......"

பாலமுருகனுக்கு தலையை சுற்றுவது போல் இருந்தது. நிமிர்ந்து ஆகாயத்தைப்பார்த்தான். வட்டவாரியினால் வரைந்தது போல், நீலமேகம் மிகக்குறுகிய வட்டமாக கண்ணுக்கு தெரிந்தது வெட்டிய உரப்பை ஒன்றிலே போடப்படும் மண் கீழிருந்து மேலே ஆடி, ஆடிச் செல்லும் போது பார்ப்பதற்கு பயங்கரமாக இருந்தது. கிணற்றுக்கு வெளியே இருப்பவர்கள் கயிற்றைஇழுக்கும் போது தற்செயலாக கயிறு அறுந்தால் குறுகிய விட்டமுள்ள அந்தக் கிணற்றின் உள்ளே இருக்கும் இருவரினது உடல்களும் உயிர்களும் உத்தரவாதமில்லாத நிலை ஏற்படுவதற்கு இடமுண்டு.

பாலமுருகனுக்கு வியர்த்துக் கொட்டியது, அவனுக்கு இது வொரு புது அனுபவம், கூலிக்காரனாக இருப்பவன் ஒரு சாண்வயிற்றுக்காக எத்தனையோ விதமான அனுபவங்கள். பயங்கரங்களை வாழ்க்கையில சந்திக்க வேண்டியிருக்கும் ...... என்பதனை அன்றைய அனுபவத்தில் இருந்து அவன் புரிந்து கொண்டான்.

வெய்யில் உச்சிக்கு வந்துவிட்டது வெட்டிய இடத்தில இருந்து ஊற்றெடுக்கும் தண்ணீர், அவர்களை மேலும் தொடர்ந்து ஆழமாக வெட்ட முடியாத நிலைக்கு கொண்டு வந்த போது தான் அவர்கள் இருவரும் கிணற்றை விட்டு வெளியே வந்தார்கள்.

"முத்துசாமி கிட்டத்தட்ட எத்தனை முழம் வெட்டியிருப்பியள்......?"

பவானிக்கு ஆழத்தை அறியும் ஆவல். பாலமுருகனுக்கு அவளின் கேள்வி எரிச்சலைக் கொடுத்தது.

"எப்படியும் ஒரு ஆறேழு முழம் வெட்டியிருப்பம்......"

பவானிக்கு வெட்டிய கிணற்றை எட்டிப்பார்க்க அச்சமாக இருந்தது. முன்பு இருந்த ஆழத்தைவிட தற்போது சற்று ஆழமாக இருப்பதுபோல் அவளுக்கு தெரிந்தது கிணற்றை விட்டு வெளியே வந்த நேரம்தொடக்கம் பாலமுருகன் ஒரு மாதிரியாக இருப்பதைக் கண்டதும் முத்துசாமி கேட்டான்.

"என்ன தம்பி ஒரு மாதிரி இருக்கிறீர்...?"

"ஒன்டுமில்லையண்ணை — கிணத்துக்குள்ளை ஒரே குனிவாக நின்று வெட்டிய துநாரியெல்லாம் விண்... விண்ணென்று வலிக்குது" எனக் கூறினான்.

"இஞ்சை பாரடா தம்பி என்ரை கையை ..." என்று பக்கத்தில் இருந்த சின்னாச்சிக்கிழவி தன் கைகள் இரண்டையும் அவர்களுக்கு காட்டிய போது பாலமுருகன் திகைத்து போய் விட்டான்.

கயிறு பிடித்து இழுத்த காரணத்தினால் உள்ளங்கைகளிலும் விரல்களிலும் வட்டம் வட்டமாக கொப்புளித்து வீங்கிப்போய் இருந்தன. பாலமுருகனுக்கு சின்னாச்சி கிழவியை பார்க்க பரிதாபமாக இருந்தது சாகப்போறநேரத்திலும் இப்படியொரு தலையெழுத்தா ...?' என எண்ணி வேதனைப்பட்டான்.

வசதி குறைவாக இருந்தால் வாழ்க்கையில் எல்லாமே குறைவாக இருக்கும் ... என்று ஏதோ ஒரு புத்தகத்தில் படித்தது அவனுக்கு ஞாபகத்திற்கு வந்தது. அவன் வீட்டிற்கு போவதற்கு எழுந்து கொண்டான் அவனைத் தொடர்ந்து மற்றவர்களும் ஒவ்வொருவராக தமது வீடுகளுக்கு சென்று விட்டார்கள்.

அவர்கள் எல்லோரும் சென்றபின் பவானியின் மனம் ஒரு நிலையில் இல்லை. கூலி இல்லாமலே ஆறேழுமுழம் வெட்டியாச்சுது இனி மழை வரும் வரைக்கும் எங்கடை புழக்கத்துக்கு தண்ணிகாணும் அது வரைக்கும் ...?

[6 ஆம் பக்கம் பார்க்க]

## என் நேசிப்புகள்

இது என் தேசம்
இந்தத் தேசத்திலிருந்து வீசும் காற்றும் நேசத்துக்குரியது
இந்தத் தென்றலின் ஸ்பரிசத்துக்கு தவிக்கிறேன்.
எனது தேசத்தின் வானிலே,
மிதந்து வரும் முகிற் கூட்டங்களைக் கூட நேசிக்கிறேன்.

முப்புறம் கடலலைகள் ஆர்ப்பரித்து,
முத்தமிடும் நிலப் பரப்பு ;
வெட்டவெளியினிலே,
நீண்டு செல்லும் அந்தக் கற்கள் நிறைந்த பாதை;
தாழும் புதர்களோடு இரகசியம் பேசும் கடல் அலைகள்,
ஊருக்கு காவலாகப் போல்,
உயர்ந்து நிற்கும் பனை மரங்கள்;
கால்கள் புதைய நடந்த வெண்ணிற மணல்,
காற்றுப் பஞ்சமில்லாமல் கைவீசும் தென்னைகள்,
மாலை நேரத்தில், மௌனமான ஒற்றையடிப் பாதையில்
அசைந்து செல்லும் மாட்டு வண்டிகளின் மணியொலிகள்,
ஆகாய வீதியில் அணியணியாய் பறந்து செல்லும்
பறவை கூட்டம்,
எல்லாமே என் நேசிப்புக்குரியவை.
சூரியன் மேற்கு வானில் புதைந்து கொண்டிருக்கும்
நேரத்தில்
பச்சையாய் பரந்து விரிந்த பசும் வயல் வரப்பினிலே
காற்றாடவே நடப்பது,
தாள் விரித்து தலை சாய்க்கும் கதிர்களும்,
கொத்துகின்ற கிளிகளும்,
கத்துகிற கன்றுகளும், அத்தனையும் இரசிப்புக்குரியவை
என் நேசத்துக்குரியவை,

இந்த மண்ணின் ஒவ்வொரு பூவையும்
ஒவ்வொரு புல்லையும் நான் நேசிக்கிறேன்,
அந்த உப்புக்கரிக்கும் கடல் நீரையும்
உவர்ந்த காற்றையும் நேசிக்கிறேன்.

- அல்லையூர் தர்மினி -

# நனவாகிய ஒரு கனவு

## காசி ஆனந்தனின் 'தமிழன் கனவு' பற்றி ஒரு பார்வை

இற்றைக்கு சுமார் முப்பதாண்டுகளுக்கு முன்பு ஒரு தமிழ கனவுகண்டான். தமிழனுக்கு என்று ஒரு நாடு வேண்டும். அதனை நிறுவுவதற்காக நிகரற்ற வீரம் பொருந்திய படையொன்று வேண்டும். என்றெல்லாம் கற்பனைகள் செய்தான் - கனவுகள் பல கண்டான். கால முனிவன் தரிசனம் கிடைக்க அவன் அவற்றை கவிதைகளாக பார்த்தான். தமிழன் கனவு என்று மகுடமிட்டு அனைவர் கைகளிலும் தவழவிட்டான்.

''வீசு குண்டால் எறிந்தாலும்,
வெட்டி உடலம் பிளந்தாலும்
ஆசைக்கு ஒருநாள் போராடி
ஆவி துறக்கப் புறப்பட்டேன்''

என்று ஆர்த்து எழுந்த அக்கவிஞன் வேறுயாரும் அல்ல மாமனிதர் என்று தலைவர் பிரபாகரன் அவர்களால் கௌரவிக்கப்பட்ட காசி ஆனந்தன் தான் தமிழன் கனவு என்று அவர் அன்று கண்ட கனவுகள் இன்று முப்பதாண்டுகளுக்கு பின்பு களம் பதிப்பாக அண்மையில் வெளிவந்துள்ளது. தமிழினமான உணர்வையும், தேசப் பற்றையும், தன்னலம் கருதாத தொண்டு மனப்பாங்கையும் வளர்க்கும் இந்நூல் இன்றைய காலச் சூழலில் வெளிவந்திருப்பது மிகவும் பொருத்தப்பாடானதாகும்.

''இழிவு சுமந்த தமிழினத்தின் துயர்
எத்தனை காலம் பொறுத்திருப்போம?
அழிவு வரும் எனினும்
பொறுப்போம... இந்த அவலச்சல் நிலைமை எவர் பொறுப்பார்?''

என்று அவன் பாடிய காலத்தில் எறிகணை வீச்சுக்கள் இடம் பெற்றிருக்கவில்லை விமானங்கள் குண்டு மழை பொழியவில்லை. கவிபர் துப்பாக்கிகளை எவரும் கண்டும் இருக்கவில்லை. வேட்டுச்சத்தங்களைத் தானும் தமிழர் கேட்டிருப்பாரோ என்பது கூடச் சந்தேகந்தான். மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாக அலையும் நிலையும் இருக்கவில்லை எனினும் இனியும் காலம்பொறுத்து இருப்பதும் அழிவுவரும் என்று அஞ்சி இழிவு சுமப்பதும் தகாது என்று இடித்துரைத்த இந்தக் கவிஞன் காலத்தை முன்னுணர்ந்த ஒரு தீர்க்க தரிசி என்பதில் எவருக்கும் ஐயப்பாடு இருக்க முடியாது.

அவ்வாறு எவருக்கேனும் ஐயம் தோன்றும் எனின் தமிழன் கனவு நூலை ஆழ்ந்து படிப்பது சாலச்சிறந்ததாகும். விழி என்னும் நெடுங்கிழவி தமிழினத்தை விழவும் வைப்பாள். எனினும் அஞ்சாதீர் என்று கால முனிவன் சொற்களின் ஊடாகக் கவிஞன் பேசுதலை கேட்கலாம்.

இலங்கைத் தீவில் தமிழ் மக்களுக்கென ஒரு தனி நாடு வேண்டும் என்னும் அரசியல் சிந்தனை கருத்தரிப்பதற்கு வெகு காலத்திற்கு முன்பாகவே ''தமிழருக்கொரு தனிநாடு உருவாகும். ஈண்டு இதனை இறைவன் உமக்கு எடுத்தருளச் சொல்லி வேண்டினதால் செப்புகிறேன் விடுக துயர் என்றான்''

எனினும் இந்தத் தனி நாடானது பேச்சுவார்த்தைப் பேரங்களாலோ, அரசியற் சதுரங்க காய் நகர்த்துதல்களினாலோ சாத்தியப்படப் போவதில்லை என்பதை அவன் துல்லியமாகவே உணர்ந்திருந்தான். அதனாலேதான் 'படை வரிசை பாரீர்' என்று உரைத்தான்.

இப்படை வரிசை தோற்றம் எடுக்கும் போதே ஈனர்களும் நெல்லிடை வளரும் களை போலத் தோன்றுவர் என்று எச்சரிக்கக் கவிஞன் தவறவில்லை.

அதனாலேதான்:

''தீனி முதல் என்பான் வயிறு உடையான்! இவன் தேமன சன மகன் தன்னலத்தான்
இனத்தை மதிப்பானா?
தானுயர்வு பெறுவதெனில்
தான் பிடித்து நிற்பான்!
மானம் விலை வைப்பான்!
இவன்
மனைவியையும் விற்பான்!''

என்றும் கூறியுள்ளார்,

இது மட்டுமன்றி எதிரியின் அரசு பொருளாதாரத் தடையும் விதிக்கும் என்பதையும், அதை எதிர்த்து தமிழ் மக்கள் ஒரு உற்பத்திப் போர் நடத்துவர் என்பதையும் முன்னுணர்ந்தவராக,

'' மண்ணுக்குள் இருக்கின்ற
கரியும் எஃகும்
மற்றுள்ள கனிவகையும்
வெட்டிப் பேர்த்து
பன்னூறாம் உழைப்பாளர்
வெளியே தள்ள
பக்கத்தே தொழிலாலை
சங்கம் ஊதும் ''

என்றும் குறிப்பிட்டுச் சொல்கின்றார்.

நீல மலைக் குறிஞ்சி நிலம்- முல்லைக்காடு. நெலவிளைந்த மருதம் அதையடுத்த நெய்தல் சோலிழந்த தமிழர் போல் இருந்த பாலை என ஐவகை நிலத்தின் ஊடாகவும் தமிழர் படை நடகதிச் செல்ல படுவதை விபரிக்கும் கவிஞர், படை இளைப்பாறுதலைக் குறிப்பிடுகையில்

''மலைமீது மலை சாய்ந்தாற் போல்
மழை மேகம் இறங்கினாற் போல்
மலை நின்ற சோலைக் குன்னே
மாவீரர் இருக்கை கொண்டார்''

என வர்ணனை செய்கின்றார்.

சாதிப்பிரிவினைகள், சமயப் பிரிவினைகள், பிரதேசப்பாகுபாடுகள் என்ற இந்நோரண்ண குழப்ப நிலைதோன்றும் என்றும் ஆனால் இவை அனைத்தையும் தாண்டி தமிழர் படைநடக்கும் என்றும் எடுத்துரைத்து நம்பிக்கை ஊட்டுகின்றார் கவிஞர்

''தேசம் அமைக்கவும், கொற்றம்
தமிழுக்கு தேடவுமே புறப்பட்டோம்
வீசும் தடக்கை வீரர்கள்
பகைக் கூட்டம் எங்கேயென்றான் வேங்கை''.

என்பது அதற்கொருசான்று போர் முகம் பற்றிய வர்ணனையில் கவிஞரின் தீர்க்கதரிசனம் காணும்போது மெய் சிலிர்ப்பது தவிர்க்கமுடியாதது கவிஞரின் வார்த்தைகளினூடு பயணம் செய்கையில் எழும் உணர்ச்சிகள்சத்தியத்தரிசனத்தின் வெளிப்பாடுகளாக அமைவதைக் காணலாம் இதனை உணர்த்தும் சில பகுதிகளை இங்கு மேற்கோள் காட்டுவது பொருந்தும்.

எட்டுத் திசைகளும் பட்டுத் தெறித்தன
வீரனர் குண்டுகளே!-குண்டு
பட்டுத் தமதுடல் கெட்டுச் சிதறிடப்
பாய்ந்தனர் தொண்டர்களே
மானம் பெரிதென ஊன உடல்விழ
மாண்டார் தமிழ் வீரர் — ஆவி
தானம் எனத்தந்த மானத் தமிழன் தோள்
தங்கமே — தங்கமடா

(7ஆம் பக்கம் பார்க்க)

- இளஞ்சேய் -

# நடனக் கலைப் பரம்பரையின் ஒரு சின்னம் சாந்தினி சிவநேசன்

நான் பரதக் கலையைப் பயின்றதற்குக் காரணம் எமக்கப்பா சுப்பையா தான் என் தந்தை காலஞ்சென்ற ஏரம்பு சுப்பையா ஓர் நாட்டியக் கலைஞர் அவரிடம் நடனம் பழகப் பலர் நடிவந்தார்கள் எனது ஐந்து வயதில் அவர்களோடு சேர்ந்து நனும் பழகினேன் சகபாடிகளுடன் சேர்ந்து அனுபவித்துப் பழகிக் கொண்டே வந்ததால் நளடையில் தானாகவே ஆர்வம் உண்டாகி, இது என்ன பதம்? இந்த முத்திரைக்கு என்ன அர்த்தம்? என்று அறிந்து கொள்ளும் ஆசை சிறுவயதிலேயே ஏற்பட்டது என்கிறார் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பரதக் கலைப் போதனாசிரியரும். நர்த்தகியுமான திருமதி சந்தினி சிவநேசன்

சாந்தினி தனது தந்தை கலைச்செல்வன் சுப்பையா மேல் வைத்திருக்கும் பாசம் வெறும் தந்தை - மகள் அன்பு மாத்திரமல்ல. தனது தந்தை சந்திரலேகா படத்தில்மேளத்தில் மேல் நின்று நர்த்தனம் செய்வதை நினைவு படுத்திக் கொள்ளும் சாந்தினி, பேசும் போதெல்லாம் தந்தையாரின் கலை தன்னைப் பரதக்கலைத் துறையில் ஈடுபடச் செய்த முயற்சி பற்றி அடிக்கடி குறிப்பிடுகிறார்.

தப்பனாரின் ஆரம்பக்கலையைப் பயின்ற சாந்தனி தமிழ் நாட்டுக்கும் போய் (தகப்பனாரைப்போல்) பரதக் கலையின் நுணுக்கங்களை பரதக் கலை உலகில் பிரசித்தமானவரும், பரதக் கலைப் பணிக்காகப் பத்மசிறி பட்டம்பெற்றவருமான அடையாறு லஷ்மணனிடம் மூன்று வருடங்கள் முறைப்படி பரதக் கலையைப் பயின்றதாகக்கூறுகிறார் கேரளத்தில் திருவனந்தபுரத்திற்கு அருகேயுள்ள வட்டியூர் காவுவில் மிகப் பிரபலமாக விளங்கும் விஸ்வ கலா கேந்திரத்தில் குரு கோவிநாத்திடம் அவர் இல்லத்தில் தங்கியிருந்து சம்பிரதாயமான முறைமிக மிகச் சிரத்தையுடன் இரண்டு வருடங்கள் கதக்களி கற்றேன், அன்று முதல் என் கலைப் பணியும் தொடர்கிறது பரதக்கலை எங்கள் குடும்பச் சொத்தாகி விட்டது என்று பெருமிதப் பட்டுக் கொள்கிறார்.

பரதக் கலையில் தற்போது முன்னணியில் இருக்கும் நர்த்தகிகளில் ஒருவராகச் சாந்தினி கணிக்கப்படுவதற்கு இன்னொரு பரிமாணமும் உண்டு சுப்பையாவின் தகப்பனார் ஏரம்பு அண்ணாவியர் என்றால் தாளக்காடி சம்பந்தப் பட்டவருக்கு நன்கு தெரியும் யாழ்ப்பாணத்தில் சின்னமேளம் வராத காலத்தில் ஆந்திராவில் ஐக்குலபாகவதர்கள் ஆடும் யஷ்ணம் போல் ஏரம்புஅண்ணாவியாரும்பெண் போல் முகமெழுதி (வேடம்) கோயில்களிலஆடியிருக்கிறார் தொடர்ந்தாற்போல் ஏரம்பர் இணுவில் கான நாடக நடன சபையில் அண்ணாவியராக இருந்து 1940க்கு முன் கூத்தும் பட்டறைகள் நடாத்தி சத்தியவான் சாவித்திரி பாதுகா பட்டாபிஷேகம் கிறுதொண்டன் போன்ற கூத்துக்களையும் சபா நாடகங்களையும் மேடையேற்றியுள்ளார்.

பரதக் கலையைப் பற்றி சாந்தினி தெளிவான சிந்தனையோடுஇருப்பதற்கு அவர் குடும்பத்தில் பெற்ற அனுபவமும் பட்டறிவும் காரணமாய் அமைகின்றன.

நீங்கள் உங்கள் ஆடல்கலையை விருத்தி செய்ய என்ன முயற்சிகள் எடுத்துக் கொள்கிறீர்கள் என்று கேட்டபோது

1970இல்இந்தியாவில் எனது படிப்பை முடித்தது முதல் இன்று வரை மரபை மீறாமல் ரசனையுள்ள புதுமைகளை நாட்டிய நாடகங்களில் புகுத்தியுள்ளேன். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் தமிழ் நாட்டுக்குச்சென்று மியூசிக் அக்கடமி, தமிழ் இசைச்சங்கம், கிருஷ்ண கான சபா போன்ற சபாக்களில் நிகழும் நிகழ்ச்சிகளைப் பார்வையிடுகிறேன். இதே போல் பரதக் கலையில் சிறப்புடையவர்களிடம் மிக விரிவான கலை நுட்பங்களைத் தெரிந்து கொள்கிறேன். இவ்வரையும் ஏழெட்டு அரங்கேற்றங்கள் நடத்திபுள்ளேன் தற்போது முன்னணியில் விளங்கும் நடன ஆசிரியர்களுக்கு நட்டுவாங்கம் செய்துள்ளேன் தந்தையின் காலம் முதல் நடனப்பள்ளி ஒன்றை நடத்தி வருகிறோம். என் தந்தையின் வழியில் நானும் இப்பணியைத் தொடர்ந்து நடத்தி வருகிறேன் இக்கலையிலக்கிய திரீயமாக மாணவிகள் பயிற்சி பெற வேண்டும் என்பது என் எனது ஆசை ரசனையுள்ள மாணவிகள் குறைந்த செலவில் பரதக் கலையை தெரிந்து கொள்வதற்காகவே நடனப் பள்ளி நடத்தப்படுகின்றது என்று எதிர்காலத்தை நோக்கி உற்சாகமாகச் சிரித்தார் சாந்தினி. அந்தச் சிரிப்பில் பெருமிதம் எதுவும் இல்லை பக்கத்தில் நடனப் பள்ளியில் பரதம் பயிலும் பயிலுனரின் பாதங்களின் நாதம்(Music of the foot) காற்றிலே மிதந்து வருகின்றது

நாட்டிய நாடகங்களில் புதிய பார்வைகள் மற்றும்புதுமைகளும் புகுத்துவது சாத்தியமாகின்றன என்றுகூறும் சாந்தினி மரபை மீறாமல் புதுமைகளை செய்ய விரும்புவதாகச் சொல்லுகிறார். எமது ஆத்மீக அனுபவத்தை நாட்டிய நாடகங்களில் நிகழ்த்திக் காட்டும் முயற்சியில் ஈடுபட்டுவருகிறேன் மௌனகுருவின் மழையை இவ்வாறு உருவாக்கிபுள்ளேன் மரபு சார்ந்து உணர்வை வெளிப்படுத்துவதில புதுமுயற்சி மழையில் சாத்தியமாகின்றது பஞ்சமும் வறட்சியும், மக்கள் துயரங்களையும் நடிப்பு மூலமும் நடன மூலமும் வெளிப்படுத்தினோம். திருக்கோணமலையில் தில நாயகம்போவின் மலைவளம் என்ற கீர்த்தனை வடிவத்தைப் பரதநாட்டியத்தில் அமைக்க முயல்கிறேன். இந்த திருக்கோணமலையில் பொருளாதார வளம் இயற்கைச் சூழல். கோணேஸ்வரர் மகிமை ஆகியவற்றுடன் பரதம் உறவாடுகின்றது. அபிநயங்கள் ஆடல்கள் மூலம் எமது பார்வையை வெளிக்காட்ட முடிந்தது என்கிறார்.

சாந்தினியின் வார்த்தைகளிலிருந்து அவரது அணுகுமுறை தெளிவாகின்றது மரபு அவருக்கு எல்லைகளை விதிக்கின்றது நடன மரபை வெகுதூரம் மீறிச் செல்லவும் அவருக்கு விருப்பமில்லை அவரது இந்தத் தயக்கத்தை நம் புரிந்து கொள்ளலாம் தான். சொல்லிக் கொடுக்கப்பட்ட பதங்களும். சொல்லிக் கொடுக்கும் நட்டுவாங்கமே பரதக் கலையின் எல்லையைத் தீர்மானிப்பவர்களாகி விடுகிறார்கள்

சில சந்தர்ப்பங்களில் நிகழ்ச்சியில் நாடக நுணுக்கங்களைப் பாவிக்கலாம். முத்திரைக்குப் பதிலாக மெய்ப்பாடுகள்மூலம் ராகபாவத்தை விளக்கலாம். பிரதி நடிப்புக்களில் நடனத்தோடு சொல்லாடலும் இடம் பெறலாம். என்றுசொல்கிறார். அவர் திருகமபாவை நாட்டிய நாடகத்தில் தேவ வரன்தங்கள் ஸ்தானிகளுடன் பஞ்ச முகனின் பாவம் ஐந்து பாத்திரங்களின் மூலம் குறிப்புணர்த்தப் படுகின்றன. அண்மையில் விபுலானந்தர் நாட்டிய நாடகத்தில் விபுலானந்தரின் வாழ்க்கை வரலாற்றை நடன நிகழ்ச்சிகளாகச் சஞ்சாரிபாவத்தில் காட்டியுள்ளோம். குழு முயற்சியில் பாடலில் வரும சந்தர்ப்பங்களை நாடக வடிவத்தில் வெளிப்படுத்தலாம் வடமோடி. தென்மோடி ஆட்ட வடிவங்களையும் கலைநேர்த்தியுடன் வேண்டிய இடங்களில் சேர்த்துக் கொள்ளலாம் இவ்வாறுகூறும் சாந்தினி, விபுலானந்தர் நாட்டிய நாடகம் பரதத்திலிருந்து வேர்பிடுங்கப்பட்ட நாடகம் அல்ல என்கிறார்.

நடனப் பள்ளியில் சிங்கார ரசம்ததும்பும் பாடல்களுக்கும் பதங்களுக்கும் இடம் தரப்படுகின்றதா ? இப்படிக் கேட்ட போது சாந்தினிகூறுகின்றார்:

பரதக் கலை உயர்தர (உயர்தரம்) வரை ஒரு பாடமாக இருக்கின்றது இதைவிர இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் நான்கு வருடக் கற்கை நெறியாகப் பரதம் கலைத்திட்டத்தில் இடம்பெற்றுள்ளது ஆசிரியர் கலாசாலையிலும் இப்பாடநெறி கற்பிக்கப் படுகின்றது நடனப் பள்ளிகளில சிறார்களும் பரதம்பயில்கிறார்கள். மாணவர்களின் உள

( 6 ஆம் பக்கம் பார்க்க )

> திருமதி சாந்தினி சிவநேசன் அவர்களுக்கு ஒரு தனிச்சிறப்புண்டு. அவர் கலைஞர்களையும் தன் ரஸிகர்களாகக் கொண்டவர். எத்தனையோ கலைஞர்கள் அவர் தந்தையார் சுப்பையாவின் மாணவர்கள் பரதம் தங்களது குடும்பத் தொழில் அது நசிந்து விடாது செய்யவேண்டும் என்பது அவரது விருப்பம். பரதம் பழகுவது யாழ்ப்பாணத்தில் அருகி விடாமல் செய்ய கலைக்கோவில் என்ற நடனப் பள்ளியையும் நடத்திவருகிறார்.

செவ்வி கண்டவர்
மதன்

# மரம் நடுவோம்

## யாழ். குடாநாட்டில்,

விறகுக்காக பெருமளவு மரங்கள் வெட்டப்படுகின்றன.
இதனால், யாழ்.குடாநாட்டில் சூழல் பாதிக்கப்படுகிறது.
இது எமது மண்ணுக்கும் மக்களுக்கும் ஏற்படுகின்றபாதிப்பாகும்
ஆகவே, நாம், ஆளுக்கொரு மரம் வைத்து பாதுகாக்க
திடசங்கற்பம் கொள்வோம்.

## மர நடுகையை ஊக்குவிக்குமுகமாக

மரக்கன்றுகளை வைத்துப் பராமரிக்க
பொலித்தீன் பைககட்டுக்கள் தேவைப்படுகின்றது.
வீடுகளில் பொதுஇடங்களில்பயன்படுத்தும் பால்மாபைக்கட்டுக்களை
எங்களிடம் ஒப்படைத்து, பக்கட்டுக்கு ரூபா ஒன்றை (1/-)
எமது காரியாலயங்களில் பெற்றுக்கொள்ளமுடியும்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம்(T.R.O.)

காரியாலயங்கள் ; அளவெட்டி, கொக்குவில்,
பருத்தித்துறை, நாகர்கோயில்,
சாவகச்சேரி, பளை, கெற்பேலி

(2728)

## 1ஆம் ஆண்டு 5ஆம் ஆண்டு

# நினைவஞ்சலி





**தில்லையம்பலம் பிரகாஸ்**
**வீரவேங்கை ரகுநாத்**
(வீரமரணம் மணலாறு)

தோற்றம்: 21-03-1974 வீரமரணம்: 15-07-1991

எல்லையிலே மண் காத்தான்
எங்கு மவன் போரிட்டான்
தொல்லை தரும் சிங்களவரை
தென்னிலங்கை அனுப்பியவன்
அல்ல லுறும் இனத்திற்கே
அடைக் கலமா னாகியவன்
வல்ல தொரு மாவீரன்
ரகுநாத்தின் புகழ் ஓங்கும்.

**தில்லையம்பலம் கிருபராசா**
**வீரவேங்கை வேந்தன்**

தோற்றம்: 28-12-1966 வீரமரணம்: 10-07-1987

முற்றுகையின் பேரிலொரு பெரு யுத்தம்
மூண்டதடா எண்பத்தி ஏழினிலே
சுற்றிவரும் படையினரை கொன்றழித்து
வென்றுவரும் வேளையிலே வேந்தனிவன்
செங்களத்தில் குருதியுடன் வீழ்கையிலே
சயனற்றை அருந்தியிவன் பொலிகையிலே
தனையிழந்தார்
இங்கிவனின் வீரம்தான் பெற்ற தடா
என்றுமவன் மாவீர னாகி விட்டான்.

எனது மகன் ரகுநாத்துடன் வீரமரணம் அடைந்த ஏனைய
பதினொரு வேங்கைகளுக்கும் எமது அஞ்சலிகள்

ஸ்ரீ முருகன் குடியேற்றம்,
வல்வெட்டித்துறை.

தாய், சகோதரர்கள்,
உறவினர்கள், நண்பர்கள்

[2741]

## தண்ணீர்...

அவளது மனம் தீர்க்கமான ஒரு முடிவுடன் முடிச்சுப் போட்டு இறுகிக்கொண்டது

அடுத்த நாள் பாலமுருகன் உட்பட வழக்கம் போல தண்ணி அள்ள வருபவர்கள் எல்லோரும் பவானியின் கிணற்றடியை நோக்கி சென்ற போது ...

"இஞ்சை தண்ணி அள்ள ஒருத்தரும் வரப்படாது .. வீட்டிற்குள் இருந்து பவானியின் குரல் காரசாரமாக ஒலித்தது.

"இவ்வளவு நாளும் தண்ணி அள்ளினதுக்காகத்தான் எல்லாரையும் கூப்பிட்டு வெறு வெட்டுவிச்சன். இனி மழை பெய்து கிணற்றிலை தண்ணி நிறைஞ்ச பிற்பாடுதான் ஆரும் தண்ணி அள்ள வரலாம். அது வரைக்கும் இப்ப தண்ணி அள்ள ஒருத்தரும் வரப் படாது ஓம் .."

(யாவும் கற்பனை)

## நடனக்கலை

வயதுக்கேற்பவே பரதம் சொல்லித்தரப்படுகிறது. 6முதல் 12 வயது வரை பக்தி ரஸம். 12 வயது முதல் 16 வயது வரை பக்தி ரஸத்தோடு சிறிது சிருங்கார ரஸத்தை சேர்க்கலாம் 16 வயதுக்கு மேல் சகல ரஸங்களையும் வயதுக்கேற்றவாறு சேர்ப்பது தான் முறை என்பது கலாநிதி கே. எஸ் தண்டாயுதபாணியின் கருத்தாகும். இதே போன்ற கருத்தைத்தான் பாலசரஸ்வதியும் கொண்டுள்ளார் எனது நடனப் பள்ளியில் பிள்ளைகளின் உளவயதுக்கும், உடல் வயதுக்கும் ஏற்றவாறு பரதக் கலையைக் கற்பிக்கின்றேன். கலாநிதி தண்டாயுதபாணியின் கருத்தோடு இலவசமாக எனது பாடத்திட்டத்திட்டங்களை அமைத்து நடனப் பள்ளியில் அதனைப் பின்பற்றுகின்றேன். பாடசாலை, ஆசிரியர் கலாசாலை, நுண்கலைக்கல்லூரி ஆகிய இடங்களில் அந்தந்தப் பாடத் திட்டத்துக்கு அமையவே போதனா முறையும் அமைகிறது. இது காறும் அப்படித் தான் நடந்து வந்துள்ளது இனியும் அப்படித்தானோ ? என்ற கேள்வியுடன் தனது செவ்வியை முடித்துக் கொண்டார் திருமதி சாந்தினி சிவநேசன்.

## 1 - ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரஜனனம் 26 — 07 — 1972

வீரமரணம் 14 — 07 — 1991

**வீரவேங்கை றெஜி**
**பொன்னையா பத்மநாதன் (பற்பர்)**
(திதி 03-07 1992)

எமது அன்புச் செல்வமே
பற்பர் நீர் மறைந்து
ஓராண்டு சென்றாலும்
உம் நினைவுகள்
என்றென்றும்
எம்மைவிட்டு நீங்காது
உமது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

சங்கானை மேற்கு,
பண்டத்தரிப்பு.
(வடலியடைப்பு)

உமது பிரிவால் துயருறும்,
அப்பா அம்மா, அக்காமார்,
அத்தான், அண்ணா, தம்பி

(2737)

## 1-ம் ஆண்டுநினைவஞ்சலி



வீரமலர்வு 17 — 07 — 1971

வீரச்சாவு 14 — 07 — 1991

**லெப்டினன்ட் மார்க்கிறெட்**
(சாந்தி சிற்றம்பலம்)

14.7.1991-ல் வெற்றிலைக்கேணியில் தரையிறக்கப்பட்ட இராணுவத்துடன் நேருக்கு நேர் நின்று வீரமுடன் போரி புரிந்து வீரச்சாவை அணைத்துக் கொண்ட தெய்வத்திருமகளுக்கு எமது வீர வணக்கங்கள்.

வேம்படி,
உடுத்துறை

(2727)

குடும்பத்தினர்.

# இரண்டாவது பாலைவனப் போர்

## நிலாந்தன்

சோளகக் காற்று தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வீசும் போது யுத்தத்தின் செய்திகளையோ அல்லது துக்கமான செய்திகளையோ முன்னறிவிப்பது போலவே அதன் வேகமும், இரைச்சலும் அமைந்து விடுகின்றன. கடந்த சில வருடங்களாகத் தமிழர்களிற்கு இத்தகைய அனுபவம் உண்டு இவ்வாறு சோளகம் பெயரும் ஒரு பிற்பகலில்தான் குமுதினிப் படகில் தமிழர்கள் கொல்லப்பட்ட செய்தி வந்தது. வடமராட்சியைத் தாக்கிய ஒப்பரேஷன் லிபரேஷனும் இவ்வாறு சோளகக் காற்றோடு சேர்ந்தே வந்தது. கடந்த வருடம் ஆனையிறவிற்கான போரும் (முதலாவது பாலைவனப் போர்) சோளகக் காற்றிலேயே நிகழ்ந்தது. இம்முறையும் சோளகக் காற்று மூர்க்கத்தோடு வீசிய ஒரு நாளில் இரண்டாவது பாலைவனப் போர் ஆரம்பமாகியது

ஆனையிறவுக்கான முதலாவது பாலைவனப் போர் நடந்துகிட்டத்தட்ட ஒரு வருட கால இடைவெளியில் அதே நிலத்தில்இரண்டாவது பாலைவனப் போர் ஆரம்பமாகியுள்ளது. இராணுவத் தரப்பில், இப்போர்களை பலவேகய I பலவேகய II என்று அழைக்கிறார்கள்.

ஒப்பீட்டளவில் பலவேகய I இல் ஈடுபட்டதை விடவும் குறைந்தளவு துருப்புக்களே இப்போது பலவேகய II இல் ஈடுபடுகிறார்கள். பலவேகய I இல் கிட்டத்தட்ட 10,000 துருப்புக்கள் ஈடுபட்டனர். ஆனால் பலவேகய II இல் 5,400 துருப்புக்கள் ஈடுபடுவதாகக் கூறப்படுகிறது ஆனால் பலவேகய I இல் இராணுவத்திடம் இல்லாத சீன டாங்கிகளும், சீன ஜெற் விமானங்களும் இப்போது இருப்பதால் இராணுவம் ஒருவிதத்தில் அதிக நம்பிக்கையோடுள்ளது. 24 மணி நேரத்திற்குள் இலக்குகளை அடைந்து விட முடியும் என்று தளபதிகள் நம்பினார்கள். இந்தியாவில் புலிகள் தடை செய்யப்பட்டுள்ளதால் அவர்களின் விநியோக வழிகள் நெருக்கடிக்குள்ளாகியிருப்பதால், பலவேகய I இன் போது இருந்ததை விடவும் இப்போது புலிகளின் பலம் குறைந்து விட்டது என்றும் இராணுவம் நம்புகிறது. அதோடு ஒப்பரேஷன் வலம்புரியின் அனுபவங்களின்படி (தீவுப் பகுதி, சங்குப்பிட்டி அனுபவங்கள்) புலிகள் திறந்த வெளிகளில் போருக்கு வரத் தயங்குவார்கள் என்றும் இராணுவம் கணிப்பிட்டிருந்தது. ஆனால் குடாநாட்டிற்கான மற்றொரு நுழைவாயிலையும் இழப்பதற்குப் புலிகள் தயாரில்லை என்பதை அப்பகுதியில் புலிகள் தமது படையணிகளை அதிகரித்ததையடுத்து இராணுவம் உணர்ந்து கொண்டது புலிகள் ஆனையிறவுப் போரை போல மற்றுமொரு பாலைவனப் போரிற்குத் தயாரானார்கள். எனவே இராணுவம் தனக்குண்டாகப் போகும் இழப்புக்களைக் குறித்துச் சிந்திக்கத் தொடங்கியது அவர்கள் முன்பு திட்டமிட்டிருந்ததின்படி வெளிகளில் குறைந்த எதிர்ப்புக்களோடும், குறைந்த இழப்புக்களோடும் முன்னேறுவது சாத்தியமில்லை என்றாகியது. எனவே இழப்புக்களைக் குறைக்கும் விதத்தில் யுத்த தந்திரோபாயங்களை மாற்ற வேண்டிய தேவை இராணுவத்திற்கு ஏற்பட்டுள்ளது.

இராணுவம் இப்போது பெருமளவு தந்திரோபாயங்களிலேயே தங்கியுள்ளது புலிகளின் பலம் குறித்து அவர்களிடம் சரியான மதிப்பீடுகள் இல்லை. அல்லது இருக்கின்ற கணிப்பீடுகளிலும் சந்தேகங்கள் உண்டு. என்பதினாலேயே இராணுவம் ஒரு பெரிய தாக்குதலை ஆரம்பிக்கும் போது அதோடு சேர்ந்து ஒரு துணை இராணுவ நடவடிக்கையை அல்லது திசை திருப்பும் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. ஒப்பரேஷன் வலம்புரியின் போது வடமராட்சியிலிருந்து மக்களை வெளியேறச் சொன்னது திசைதிருப்பும் முயற்சிதான் அதே சமயம் தீவுப் பகுதியில் மண்டைதீவுவரை இராணுவம் நகர்ந்ததும் ஒரு துணை இராணுவ நடவடிக்கைதான் வலம்புரியின் பிரதான இலக்கு சங்குப்பிட்டி துறையாகவே இருந்தது. ஆனால் கடைசிவரை எங்கு யுத்த முனை திறக்கப்படும்? என்பதான திகைப்பில் புலிகளையும், மக்களையும் வைத்திருக்கவே இராணுவம் விரும்பியது இது போலவே கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட சண்டமாருதமும். சண்டமாருதம் ஒரு விதத்தில் துணை இராணுவ நடவடிக்கைதான். பிரதான இராணுவ நடவடிக்கை. அதே காலத்தில் முல்லைத்தீவில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பரேஷன் ஏழு சக்திகள்தான் மணலாற்று விநியோக வழியைக் கைப்பற்றுவதற்கான இராணுவத்தின் எத்தனங்களில் புலிகளின் கவனத்தைச் சிதறடிப்பதே சண்டமாருதத்தின் நோக்கம் எனலாம்.

கடந்தவாரம் ஆரம்பமாகிய இரண்டாவது பாலைவனப் போரின்போதும் இவ்வாறான திசைதிருப்பும் முயற்சியில் ஒரு பொறுப்பு வாய்ந்த இராணுவத்தளபதியே நேரடியாக ஈடுபட்டார் பிரிகேடியர் விஜய விமலரட்ண, யாழ் நகரவாசிகளையும், சாவகச்சேரி வாசிகளையும் இடம்பெயர்ந்து போகுமாறு உத்தரவிட்டார். ஆனால் தாக்குதல்களின் மையம் வடமராட்சி கிழக்கில் குடாநாட்டின் விளிம்பிலேயே இருந்தது. இவ்வாறு மக்களையும் புலிகளையும் திசைதிருப்பும் முயற்சியில் இராணுவம் இப்போதெல்லாம் அடிக்கடி ஊரடங்குச் சட்டங்களைப் பிறப்பிக்கின்றது. ஆனால் எல்லா ஊரடங்குச் சட்டங்களின் போதும் தாக்குதல்கள் நடப்பதில்லை ஊரடங்குச் சட்டங்கள் விலக்கிக்கொள்ளப்பட்டதன் பின்னர் சில சமயங்களில் தாக்குதல்கள் ஆரம்பமாகின்றன. சமீபத்தில் ஒப்பரேஷன் சண்டமாருதத்தின் போது இவ்வாறு நடந்தது. இவ்விதமாக ஊரடங்குச் சட்டங்களும். மக்களை வெளியேறக் கோரும் அறிவிப்புக்களும் கூட யுத்த தந்திரோபாயங்களாக மாறிவிட்டமை என்பது இராணுவம், வெற்றியின் பொருட்டாக எந்த ஒரு மலிவான தந்திரோபாயத்தையும் கையாளத் தயாராகி விட்டதையே காட்டுகிறது.

முதலாவது பாலைவனப் போர் மிகவும் உணர்ச்சிகரமானதாக இருந்தது. இரு தரப்பினருக்குமே அது கௌரவப் பிரச்சினையாகவும், கேந்திர முக்கியத்துவமுடையதாகவும் இருந்தது. அந்தப் போரில் ஒரு வேகமும் தொடர்ச்சியும் வேண்டியிருந்தது தனது முழு வழங்களையும் பாவித்தாவது ஆனையிறவுத் தளத்தைக் காப்பாற்றுவதற்காக இராணுவம் போராடியது. எனவே எத்தகைய இழப்புக்களுக்கும் அவர்கள் தயாராக இருந்தார்கள், ஆனால் இம் முறை அவ்வாறில்லை. குடாநாட்டிற்கான சுற்றுப்பாதையைத் துண்டிப்பதன் மூலம் புலிகளின் படைநகர்வுகளை நெருக்கடிக்குள்ளாக்குவதே பலவேகய IIஇன் நோக்கம். இதில் துருப்புக்கள் சில சமயம் தமது இலக்குகளை அடைந்தாலும் கூட அது ஒரு பருவகால வெற்றியாகவே அமையப் போகிறது ஆனையிறவிற்கும் வெற்றிலைக்கேணிக்கும் இடையிலான 10 கிலோமீற்றர் நீளமுள்ள நிலப்பரப்பில் தொடரான காவலரண்களைப் பேணுவது கோடைக்காலத்திற்குத்தான் ஓரளவிற்குச் சாத்தியம். ஆனால் மழையோடு காவலரண்கள் மிதக்க ஆரம்பித்து விடும். எனவே வெளியைத் துண்டாடி வேலிபோடுவதை விடவும், வெளிக்குள் பிரவேசிக்கும் வாயில்களாக அமையும் நிலப்பரப்பில் தனது கட்டுப்பாட்டை விஸ்தரிப்பதே இராணுவத்தின் இலக்காயிருக்கும் எனினும் மழை நாட்களில் கொம்படிவெளி முழுவதையும் இராணுவம் கணகாணிப்பதற்கு இந்த வெற்றி உதவுமா என்பது சந்தேகத்திற்குரியதே. இவ்விதம் நிச்சயமற்ற பருவகால வெற்றி ஒன்றிற்காக தொகையான துருப்புக்களை இழப்பதற்கு இராணுவம் தயாரா?

ஆனாலும் அவர்களால் பின்வாங்கமுடியாது. ஏனெனில் இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரட்ணாவைப் பொறுத்தவரை இதுஒரு கௌரவப்பிரச்சினை. இவ்வருடத்தின் ஆரம்பத்தில் அதிகாரங்கள் குறைக்கப்பட்ட கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் ஹமில்ரன் வணசிங்காவிற்கு அவர் பதில் சொல்லவேண்டிய கட்டாயமுள்ளது என்று அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள். முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிற்கு விருப்பமானவர் என்று கூறப்படும் ஹமில்ரன் வணசிங்காவின் அதிகாரங்கள் இவ்வருடத்தின் ஆரம்பத்தில் குறைக்கப்பட்டன. அதே சமயம் ஜனாதிபதி பிரேமதாஸாவின் மனைவியுடைய உறவினரான சிசில் வைத்தியரட்ணாவின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டன. ஹமில்ரனின் போர்த்திட்டங்கள் எதிர்பார்க்கப்பட்ட வெற்றிகளைப் பெறத்தவறியதாலேயே மேற்படி தலைமைப் பீட மாற்றங்கள் செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது. ஹமில்ரனிடம் இருந்துஎடுக்கப்பட்ட அதிகாரங்கள் சிசிலிடம் தரப்பட்டன. ஹமில்ரன் தனது பதவிக்காலத்தில் ஈட்டிய வெற்றிகளில் பெரியதும், உணர்ச்சிகரமானதும் என்று வர்ணிக்கப்படுவது முதலாவது பாலைவனப்போரில் (ஆனையிறவுப் போரில்) பெறப்பட்ட வெற்றிதான். அவ்வாறெனில் இரண்டாவது பாலைவனப் போரை ஆரம்பித்திருக்கும் சிசில் வைத்தியரட்ண (இப்போது ஹமில்ரன் ஒரு பார்வையாளர்) ஹமில்ரனிற்கு பதில் கூறுவதிற்காகவும் வெற்றியை நிச்சயப்படுத்த வேண்டிய கட்டாயமுள்ளது.

யாழ்பாணத்திற்கான மற்றொருவாசலையும் மூடுவதின் மூலம் ஆனையிறவுமுகாமிற்கூடாகச் செல்லும் கண்டி வீதியைப் போக்குவரத்துக்கு அனுமதிக்குமாறு புலிகளை நெருக்க முடியும் என்று சிசில் வைத்தியரட்ண நம்புகிறார். ஆனால் எந்த நிலையிலும் ஆனையிறவுப் பாதையைத் திறப்பதற்கான சாத்தியப்பாடு இருப்பதாகத் தெரியவில்லை தன்னுடைய தலைவாசல்கள் ஒவ்வொன்றாக மூடப்பட்டு விட்ட பின்னரும்கூட யாழ்ப்பாணம் சகதி மிகுந்ததும் ஆபத்துக்கள் மிகுந்ததுமான சுற்றுப்பாதைகளூடாகத் தனது பயணத்தைத் தொடரவே செய்தது முற்றுகையிடப்பட்ட காலங்களிலெல்லாம் அது தனது செய்திகளைவெளியுலகிற்கு அனுப்பவே செய்தது இனிமேலும் ஆனையிறவிற்கும் சங்குப்பிட்டிக்கும் இடையிலான ஆபத்தான கடல்நீரேரிக் கூடாகவேனும் அது தனது பயணத்தைத் தொடரத்தான் போகிறது.

---

# சீனித் தொழிற்சாலைகள் மக்கள் மயப்படுத்தப்படும்

(புத்தளை)

தோட்ட நிர்வாகங்களைப் பொறுப்பேற்றுள்ள நிறுவனங்களே தோட்டங்களுக்கு தேவையான நிர்வாகிகளை நேர்முகப்பரீட்சையின் மூலம் நியமிக்கும் இந்த நியமனங்களை இனங்கிதாசாரப்படி மேற்கொள்ளும்படி பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கடந்த ஞாயிறு மாலை பெருந்தோட்டத் தொழில்துறைஅமைச்சர் திரு. ரூபா கருணாதிலக்க கிராம எழுச்சிகள் காட்சித்திடலில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

செவனகல, கந்தளை, ஹிங்குராண சீனித்தொழிற்சாலைகள் இவ்வருட இறுதிக்குள் மக்கள்மயப்படுத்தப்படும். இங்கு மேலதிக தொழிலாளர்கள் இல்லைஇதன்காரணமாக இங்கிருந்து தொழிலாளர்கள் நஷ்ஈடு வழங்கி வேலை நீக்கம் செய்யப்படமாட்டார்கள் எனவும் தெரிவித்தார்.

---

# நிதி வழங்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கை காரணமாக இறந்துள்ள சுமார் 300 பேரின குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான நிதியை வழங்கும்படி யாழ். அரசஅதிபர் புனர்வாழ்வு அமைச்சைக் கேட்டுள்ளார்.

சுமார் பத்து மில்லியன் ரூபாவை புனர்வாழ்வு அமைச்சிடம் யாழ் அரசஅதிபர் எதிர்பார்க்கின்றார். இந்நிவாரணம் மிகவிரைவில் வழங்கப்பட உள்ளதாக தெரியவருகின்றது. (பா)

---

# தபாற் சேவகர் வீட்டில் வெளிநாட்டுத் தபால்கள்

(கொழும்பு)

வெளிநாட்டு உள்நாட்டுக் கடிதங்களை உரியவர்களுக்கு விநியோகிக்காது தனது வீட்டில் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கொழும்பு தென்பகுதியில் உள்ள தபாற்சேவகர் ஒருவரை தபால் திணைக்களம் தற்காலிக வேலை நீக்கம்செய்துள்ளதாக தெரியவருகிறது

தகவல் ஒன்றை அடுத்து தபால் திணைக்கள அதிகாரிகள் பொலிசாரின்உதவியோடு இவரது வீட்டை வெள்ளியன்று சோதனையிட்டபோது வீட்டில் உள்ள தையல் மெசினுள் கொழும்பு தென்பகுதியலுள்ள 27 பேருக்கு வந்த வெளிநாட்டுக் கடிதங்களும் மூன்று உள்நாட்டுக் கடிதங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டுக் கடிதங்களுள் பெருமளவு பணம், குறிப்பிடப்பட்ட பிரிட்டிஷ் போஸ்டல் ஓடர்களும் வங்கி டிராப்டுகளாக இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொலிசார் மேற்கொண்டு விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

---

# உத்தியோக பூர்வ கோரிக்கை வரவில்லையாம்

[கொழும்பு]

விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரனையோ அல்லது வேறு ஒருவரையோ இந்தியாவிற்கு நாடு கடத்தக் கோரி இந்திய அரசாங்கத்திடம் இருந்து எத்தவிதமான சம்பிரதாய பூர்வமான கோரிக்கையும் விடுக்கப்படவில்லை என்று சிறிலங்காவின் வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

---

# நனவாகிய ஒரு

பள்ளிச் சிறார்களும் நல்லறப் போரிலே
பாய்ந்து! களிக்கின்றார்! —
செந்நீர்
வெள்ளத்திலாடி மரணத்தின் முத்தம்
விரும்பித் துடிக்கின்றார்!

ஓவென்றிரைந்து நடக்குதடா எங்கும்
உரிமைப் போராட்டம் —
வாழ்வு
தாவென்று கேட்டு மடியுதடா எங்கள்
தமிழர் படைக்கூட்டம்.

பெண்கள் மோட்டார் சைக்கிள் பின் ஆசனத்திலே தன் கணவனோடுஅமர்ந்துபயணம் செய்வதைக் கூட விபரீதமான தொன்றாக கற்பனை செய்த அந்தக் காலத்தில்

"பெண்களை மென்மைப் பிறவிகள் என்று
பேச மனம் வருமோ? அங்கே
மண்ணில் உயிர் சிந்தும் இளைஞருக்கு வாய்த்த
மகளிர் குலமலவோ?"

என்றும் கேள்வி எழுப்பி வைக்க அவர் தவறவில்லை.

உலக மன்றம் வரை தமிழ்க்குரல் ஏறும். அவரின் விடுதலைக்காக இந்த வையகமே ஆர்த்தெழுந்து குரல் கொடுக்கும் என்று கூறிவைத்த கவிஞன் விடுதலை பெறும் நாளில் ஏற்படும்களிப்பேருவகை பற்றி எடுத்துரைக்கவும் தவறவில்லை,

இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தில் மகாகவி சுப்பிரமணிய பாரதியும், வங்கக் கவி ரவீந்திரநாத் தாகூரும், இன்னும் உலகரங்கில் பேசப்படும் பல்வேறு கவிஞர்களுக்கு ஈடாகவும் இணையாகவும் பேசப்படக்கூடிய ஈழத்தின் தமிழ்க் கவிஞர் என்று கவிஞர் காசி ஆனந்தன் இனம் காட்டப்படுதல் தகும் என்பதற்கு இந் நூல் மேலும் ஒரு ஆதாரம்

எனினும் மற்றக் கவிஞர்களைப போல் களத்தைப்பற்றியும், போராட்ட வாழ்க்கை பற்றியும் கற்பனையில் கனவு கண்டதோடு மட்டும் இவர் இருந்து விடவில்லை களம் ஆடிய கவிஞராகவும், நீண்ட சிறை வாழ்வை அனுபவித்தவராயும் இருப்பதால் இவரது வார்த்தைகளுக்கும் வாழ்க்கைக்கும் இடையில் சொல்லுக்கும்- செயலுக்கும் இடையில் இடைவெளியே ஏதும் இல்லை எனலாம்.

இதனாலேதான்,

"மறவர் படைதான் தமிழ்ப் படை
குமரன் ஒன்றுதான் அடிப் படை

[2 ஆம்பக்கம் பார்க்க]

## ஆரம்பக் கல்வி பயிலுனர் ஆசிரியர் பரீட்சை

ஆரம்பக் கல்வி பயிலுனர் ஆசிரிய தெரிவுப் பரீட்சைக்கு தோற்றுபவர்களுக்கு பிரவேச அட்டவணைகள் தபாலில் கிடைக்காவிட்டால் உடனடியாக பரீட்சை ஆணையாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறனர்.

இப் பரீட்சை இம் மாதம் 11 ஆம் திகதி நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

## கே. ஜி. பியிடம் ராஜீவும் பணம் பெற்றார்

(மொஸ்கோ)

சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமோ பண்டார நாயக்கா, முன்னாள்இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, அமெரிக்க கம்யூனிஸ்ட்கட்சித் தலைவர்கள் ஆகியோர் அவர்களது கட்சிக்கணக்காக சோவியத்யூனியனிடம்இருந்துபணம் பெறறதாக ரஷ்யபபத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இஸ்பெக்தியான் என்ற மொஸ்கோ பத்திரிகை வெளியிட்டுள்ள கட்டுரை ஒன்றில் மேற்படிதகவல்கள்குறிப்பிடப் பட்டுள்ளன.

ராஜீவ் காந்தி பெற்ற பண உதவியை இட்டு அவர் நன்றி தெரிவித்தார் என்றும் கே ஜி. பி. தலைவர் வி. செப்ரிகோ தெரிவித்துள்ளார்.

## நரசிம்மராவ் அரசிற்கு எதிராகப் பிரேரணை

(டில்லி)

சிறுபான்மை அரசு எனப்படும் பி.வி. நரசிம்மராவ் அரசுக்கு எதிராக லோக்சபாவில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர முக்கிய எதிர்க்கட்சிகளான தேசிய முன்னணியும், இடதுசாரிக் கட்சிகளும் முடிவுசெய்துள்ளன.

பிரதமர் நரசிம்மராவுக்கு எதிராகக் கொண்டு வரப்படும் முதல் நம்பிக்கையில்லாப் பிரேரணை இதுவாகும்.

இந்த மாதம் நடைபெறும் லோக்சபாக் கூட்டத் தொடரில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர இந்தக் கட்சிகள் திட்டமிட்டுள்ளன.

அரசு மக்கள் விரோதப் பொருளாதாரக் கொள்கையை கடைப்பிடிப்பதாகவும்அன்னிய நிறுவனங்களைக் கட்டுப்பாடின்றி நாட்டில் அனுமதித்தல் வங்கி மற்றும் கோடிக்கணக்கான ரூபா பங்குச் சந்தை மோசடி, கட்டுக்கடங்காத பணவீக்கம், ஹரிஜன மக்களுக்கு எதிராக நடைபெறும் வன்செயல்கள் என்பன பிரதமர் நரசிம்மராவ் பதவி விலகப் போதுமான காரணங்கள் என எதிர்க்கட்சிக் கூட்டணி தெரிவிக்கின்றது.

பாரதீய ஜனதாக்கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிக்குமா என்பது தெரியப் படுத்தப் படவில்லை.

## ஒரு வருட நினைவு நாள்



**வரதன்**

(நடராஜா வரதராஜா)

கரவெட்டியில்: 22-12-1959
கொட்டகலயில்: 03-07-1991

வரதா!

உன்னை இந்தத் தேசமிழந்து ஒரு வருடமாகி விட்டதா? நீ, ஏற்படுத்திய அதிர்வுகள் இன்னும் முழுமையாக அடங்கவில்லையே!

பொறுத்திரு மகனே,

மிக விரைவில் உன் கல்லறையின் முன் - இந்தத் தேசம் விடுதலை கீதமிசைக்கும்.

குடும்பத்தினர்
நண்பர்கள்

(சி/4643)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இருமுனைக் கொள்கை

### - பிரட்மன் வீரக்கோன்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு, இராணுவ நடவடிக்கை ஆகிய இருமுனைக் கொள்கையை கைக்கொள்வதன் மூலம் அப்பகுதியில் சட்டத்தையும் ஒழுங்கையும்நிலைநாட்ட அரசாங்கம் முயற்சி எடுக்கின்றது என்று சிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் வெளிநாட்டுச் செய்தியாளர் மாநாட்டில் பேசிய பிரட்மன் வீரக்கோன் இதனைத் தெரிவித்தார். அந்நிய முதலீட்டாளர்கள் எதிர்பார்க்கும் அரசியல் ஸ்திரம் வட - கிழக்கு தவிர்ந்த இலங்கையில் இருக்கின்றது என்றும், இந்த பாதுகாப்பு நிலைகள் ஸ்திரமாக உள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த வருட இறுதிக்குள் இலங்கை முழுவதிலும் சட்டம் ஒழுங்கு பேணப்படும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## துப்பாக்கிச் சூடு

நேற்று நண்பகல் அளவில் மண்டைதீவுச் சந்தி சிறிலங்கா இராணுவ காவலரணில் இருந்து துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன.

பிற்பகல் 2-00 மணிக்குப் பிற்பாடு தீவுப்பகுதி சிறிலங்கா இராணுவ முகாம்களில் இருந்து எறிகணைத் தாக்குதல்களும் நடாத்தப்பட்டன (21)

## உலர் உணவு அட்டைகளை சமர்ப்பிக்கவும்

ஆடி 92 இற்கான உலர் உணவு விநியோகம் மேற்கொள்ள வேண்டி இருப்பதனால் பாவனையாளர்கள் தங்களிடமுள்ள உலர் உணவு அட்டைகளை தங்களுக்குரிய கிளைகளில் சமர்ப்பிக்கும் படி வேலணை, ஊர்காவற்றுறை பலநோக்கு கூட்டுறவுச் சங்க முகாமையாளர்கள் கேட்டுள்ளனர்.

வேலணை ப. நோ. கூ.சங்க அட்டைகளை 7 ஆம் திகதிக்கு முன்பாகவும் ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்க அட்டைகளை 5 ஆம் திகதிக்கு முன் பாகவும் ஒப்படைக்கும் படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## கொக்கட்டி

யோர் சுடப்பட்டபின் எரிக்கப்பட்டதாகவும்,

கண்ணப்பர் சின்னவர் என்பவரும் அவரது மனைவியும் வாடியில் இருந்த வேளை வாடியுடன்சேர்த்துக்கொளுத்தப்பட்டதாகவும் புகாரிடப் பட்டுள்ளது.

கடந்த வருடம் கொக்கட்டிச் சோலையில் நடந்த அசம்பாவிதங்களின் பின்னர் அப்பகுதியில் கடந்த வாரம் இச் சம்பவம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதே நேரம் இப்பகுதியிலிருந்து விசாரணைக்கென சிறிலங்கா ராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்ட பதின்மூன்று தமிழர்கள் இன்னமும் விடுதலை செய்யப்படவில்லை.

## பாடசாலை

ருந்து உடுத்துறை, வத்திராயன் பகுதி குடியிருப்புகளை நோக்கி எறிகணை வீச்சுக்கள் இடம் பெற்று வருவதினால் அப்பகுதியில் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

இதனால் உடுத்துறை மகா வித்தியாலயம், மருதங்கேணி இந்து பாடசாலை ஆகியன இயங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இடம் பெயர்ந்த மக்கள் செம்பியன்பற்று, நாகர்கோயில் பகுதியில் தஞ்சமடைந்துள்ளனர். (36)

## இந்திய

ததன் மூலமாக சிங்களவர்களை திருப்திப்படுத்தலாம் என எதிர்பார்க்கிறது. இந்திய சட்ட ஆலோசகர்கள் குழுவை அனுமதிக்க மறுத்ததன் மூலமாக புலிகளை சாந்திப்படுத்த முயற்சிக்கிறது என அவதானியொருவர் கூறினார்.

## தென்னிலங்கையில்

## ஆர்ப்பாட்டக்காரர்மீது தாக்கு ஒருவர் பலி; 140 பேர் காயம்

(கொழும்பு)

ஜனாதிபதி ஆர் பிரேமதாசா பதவி விலகக் கோரி நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஜனகோஷம் என்ற இரைச்சல் ஆர்ப்பாட்டப் போராட்டம் சமகாலத்தில் மாத்தறமாவட்டத்தில் திக்குவலையிலும் இடம் பெற்றது.

திக்குவலையில் நடந்தஇந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மீது அடையாளம் தெரியாதகும்பல் ஒன்று தாக்குதல் நடத்தியது இதில் ஒருவர் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டார் என்றும் கூறப்படுகிறது. இதில் 140 பேர் படுகாயமடைந்தனர் என்றும் தெரியவந்துள்ளது.

படுகொலை நடந்ததை உறுதி செய்திருக்கும் திக்குவலைப் பொலிசார் இது ஆர்ப்பாட்டம் தொடர்பான படுகொலை என்பதை மறுத்துள்ளனர்.

## பல்லேகலதடுப்புமுகாமிலும் கோஷ்டி மோதல்

(கண்டி)

கண்டி பல்லேகல தடுப்புக் கைதிகள் முகாமில் ஏற்பட்ட கோஷ்டி மோதல்களில் ஒரு தடுப்புக்கைதி உயிரிழந்ததாகவும், மூன்றுபேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு அனேகமாக தங்க வைக்கப்பட்டுள்ளவர்கள் தமிழர்கள் என்றும், மூன்று நாட்களாக இவர்கள் மத்தியில் மோதல்கள் இடம்பெற்றதாகவும் முகாம் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் காலி பூஸா முகாமில் மோதல் ஏற்பட்டதும் ஒருவர் உயிரிழந்ததும் தெரிந்ததே.

## முறையீடு

அலுவலகத்திற்கு தங்கள் முறையீடு அடங்கிய கடிதங்களை அனுப்பிவைத்துள்ளனர்.

யாழ். அரச அதிபரின் மூலம் அனுப்பிவைக்கப்பட்ட இக்கடிதங்களில் குறிப்பாக இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் தாங்கள் படும் கஷ்டங்களை கூறி தங்கள் உறவினரை விடுதலை செய்யுமாறு கோரி எழுதியுள்ளனர். (பா)

## குரங்கு

நோயால் பாதிக்கப்படுவார் என டாக்டர்கள் கருதினர்.

இதுபற்றி சத்திர சிகிச்சையை மேற்கொண்ட டாக்டர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் வேறு மிருகங்களினதும் உறுப்புகள் இவ்வாறு சத்திரசிகிச்சையின் போது பயன்படுத்த இந்தவெற்றிவழி கோலும் என தெரிவித்தார்

நோயாளி மயக்கம் தெளிந்து சுகமான நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## புதிய

இன்றது. இம் மந்திர ஆலோசனையில், புதிய போர்முனைகளைத் திறத்தல் குறித்தும் தற்போதைய போர் வியூகத்தைமாற்றி அமைத்தல் குறித்தும் தீவிரமாகப்பரிசீலிக்கப்பட்டதாக இராணுவ வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

## விளையாட்டுப் போட்டிகள்

தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவின் 1992 ஆம் ஆண்டிற்கான தடகள விளையாட்டுப்போட்டிகள் எதிர்வரும் 6-7-92, 7-7-92 திங்கள், செவ்வாய் ஆகிய நாட்களில் மாலை 2.00 மணி முதல் நடைபெறும்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி மைதானத்தில் நடைபெற உள்ள மேற்படி போட்டிகளுக்கு விண்ணப்பித்த அனைத்து போட்டியாளர்களும் குறித்த நேரத்திற்கு சமுகம் தருமாறு பிரிவின் விளையாட்டதிகாரி கேட்டுக்கொள்கிறார்.

## புளொட்

புளொட் தேசவிரோதிகள் பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இத்துப்பாக்கிப் பிரயோகத்தினால் க. கனகலிங்கம் (வருஷப்புலம் சுன்னாகம்) என்னும் லொறிச்சாரதி அந்த இடத்திலேயே பலியானார்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

02 07. 1992

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 4678

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்:-
26-9158, 24-7360, 27-7627, 24-6280, 26-1724, 24-5703, 42-1059, 24-8212, 27-6821, 27-7993, 26-7234. 37-1302, 27-6032, 26-6309, 26-4005, 41-3934, 27-7740, 27-9707, 42-295, 36-2955, 36-780, 36-6054, 25-3757, 36-8307.

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்:-
26-672, 28-9692, 27-7653, 26-4809. 26-1745, 43-916, 26-2827, 28-1049, 28-6623, 42-2157.